# 15 - தினங்களில் செல்வ வளமை தரும் பிரபஞ்ச ரகசியம்

பல்லாயிரக்கணக்கானவர்களின்

வாழ்க்கையை மாற்றிய ஒரு பிரபஞ்ச விந்தை,



## நாம் அன்றாடம் பயன்படுத்தும் தேதிகளும், எண்களும் தோன்றிய விதம்

வான மண்டலத்தில் ஏராளமான கிரகங்கள் இருந்தாலும் நாம் வசிக்கும் பூமிக்கு சூரியன், சந்திரன், குரு, செவ்வாய், புதன், சுக்கிரன், ராகு, கேது, சனி முதலிய கிரகங்களில் இருந்து மின்காந்த அலைகள் வருவதாகவும், அவை பூமியில் பிறக்கும் உயிரினங்களின் மீதும் அவற்றின் வாழ்க்கையிலும் பல தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் கிரேக்கர்கள் கண்டறிந்தனர்.

இதில் ஒவ்வொரு கிரகத்தின் மின்காந்த அலைகளை வேறுபடுத்துவதற்காக அக்கிரகத்தின் தோற்றங்களை அடையாளமாக குறித்தனர். உதாரணமாக சுக்கிரன் என்ற கிரகத்தின் மின்காந்த அலைகள் பூமியில் விழும் நாளை குறிப்பதற்கு அக்கிரகத்தின் வடிவத்தினை குறித்து வைத்தனர். அந்த வடிவமே நாம் இன்று சொல்லும் 6- என்ற எண்.


இந்த 6- என்ற எண் உடைய நாள் சுக்கிரன் என்ற கிரகத்தின் மின்காந்த அலைகள் உடைய நாளாக கிரேக்கர்கள் குறித்து வைத்தனர். பின்னாலில் அந்த எண்ணை ஆங்கிலேயர்கள் தேதிகளாக பயன்படுத்தினர். இவ்வாறுதான் ஆங்கில தேதி உருவாகியது.

அவை முறையே

| கிரகம் | கிரேக்கர்கள் குறித்த கிரக வடிவம் | ஆங்கிலேயர் மாற்றிய எண். |
|---|---|---|
| சூரியன் |  | 1 |
| சந்திரன் |  | 2 |
| குரு |  | 3 |
| செவ்வாய் |  | 9 |
| புதன் |  | 5 |
| சுக்கிரன் |  | 6 |
| சனி |  | 8 |
| ராகு |  | 4 |
| கேது |  | 7 |

இன்று நம் நடைமுறையில் உள்ள ஆங்கில தேதி என்பது கிரகங்களின் மின்கா அலைகளை அடிப்படையாக கொண்டவை.

## ஆங்கில தேதி விளக்கம்

**தேதி - 1 - வடிவம்** 

சூரியனின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

**தேதி : 2- வடிவம் -** 

சந்திரனின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

**தேதி : 3 - வடிவம் -** 

குருவின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

**தேதி : 4 - வடிவம்** 

இராகுவின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

**தேதி : 5 - வடிவம்** 

புதனின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

**தேதி : 6 - வடிவம்** 

சுக்கிரனின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

**தேதி : 7 - வடிவம் -** 

கேதுவின் மின்காந்த அலைகள் பூமியில் உடைய நாள்.

**தேதி : 8 - வடிவம் -** 

சனி கிரகத்தின் மின்காந்த அலைகள் பூமியில் உடைய நாள்.

**தேதி : 9 - வடிவம் -** 

செவ்வாயின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

தேதி : *10* - பத்து மடங்கு சூரியனின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

தேதி : *11* - பத்து மடங்கு சந்திரனின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

**தேதி : 12**

சூரியன், சந்திரன், குரு இம்மூன்று கிரகத்தின் மின்சக்தி பூமியில் உடைய நாள்

சொல்லியிருக்கிறார்கள். மேலும் அவர்கள் நீர்சத்துக்களை உடைய காய்களை மேற்கூறிய தேதிகளில் பயிரிட்டால் அதிலிருந்து பெறப்படும் காய்கள் மிகவும் புஷ்டியாகவும் நீர் சக்தி மிகுந்தும் இருப்பதை கண்டறிந்தனர். அதனை இன்றும் நம் அனுபவங்களில் செய்து பார்த்து உணர்ந்து கொள்ளலாம். மேலும் மேற்கூறிய தேதியில் பிறக்கும் குழந்தைகள் உடம்பு நீர்உடல் பெற்று இருப்பதனையும் நாம் இன்று காண முடிகிறது. இக்கிரகத்தின் மின்காந்த அலைகளை உடலில் நல்ல முறையில் பெற்று இருப்பவர்களுக்கு கற்பனா சக்தியும், கவிதை புனையும் ஆற்றலும் இருப்பதையும் நாம் காண முடியும்.

## குரு

இக்கிரகத்தின் மின்காந்த அலைகளிலிருந்துதான் மனித உடம்பில் தோல் வளர்ச்சியடைகிறது என கண்டறிந்தனர். இக்கிரகத்தின் மின்காந்த அலைகளை உடைய நாள்தான் 3, 12, 21, 30 என்ற தேதிகள்.

தோல் ரீதியான பாதிப்புகள் இந்த கிரகத்தின் மின்சக்தி குறைந்தவர்களுக்கு ஏற்படுகிறது. மேலும் குழந்தையை உருவாக்க தேவையான உயிரணுக்கள் இக்கிரகத்தின் மின்காந்த அலையிலிருந்தே மனித உடல் பெறுகிறது. எனவேதான் ஜோதிட சாஸ்திரத்தில் இக்கிரகத்தை புத்திர காரகன் என்று அழைக்கிறோம்.

## ராகு, கேது:-

இக்கிரகத்தின் மின்சக்தியிலிருந்துதான் மனித உடம்பில் நச்சுக்கள் தோன்றுவதாக சொல்லப்பட்டு இருக்கிறது. இக்கிரகத்தின் மின்சக்தி மனித உடம்பில் விந்து சக்தியினை நீர்த்து போகச் செய்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் இக்கிரகத்தின் மின்சக்தி பாம்பு போன்ற உயிரினங்களில் அதிகமாக இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவேதான் பாம்பை அடித்துக் கொன்றால் அதன் உடம்பில் இயங்கும் மின்காந்த அலைகள் அடித்துக் கொன்ற மனித உடம்பில் இரண்டற கலந்து விந்து சக்தியினை நீர்த்து போகச் செய்கிறது. இதுவே நம் ஜோதிட சாஸ்திரத்தில் நாக தோஷம் என்று சொல்லப்படுகிறது.

## புதன்:-

இக்கிரகத்தினுடைய மின்சக்தியில்தான் மனித உடம்பின் நரம்புகளும், விவேகமும், புத்தியும் செயல் படுத்தப்படுகிறது. இக்கிரகத்தின் மின்காந்த அலை மனித உடம்பின் விந்து சக்தியினை செயலிழக்கச் செய்கிறது. எனவேதான் ஜோதிட சாஸ்திரத்தில் இக்கிரகத்தினை ''மலடன்'' என்றும், அலிகிரகம் என்றும் சொல்லப்படுகிறது.

இக்கிரகத்தினுடைய மின்சக்தி சக்தி, சிவம் (ஆண், பெண்) இரண்டும் அற்றது இது ஒரு நடுநிலையான (Nutural) மின்சக்தி உடைய கிரகமாக சொல்லப்படுகிறது.

## சுக்கிரன்

இக்கிரகத்தின் மின்சக்தியில் இருந்துதான் ஆணுக்கு விந்தும், பெண்ணுக்கு நாதமும் சுரக்கிறது. இக்கிரகத்தின் மின்சக்தி நல்ல முறையில் அமைந்தவர்கள் அதிகமான பெண் இச்சை உள்ளவர்களாக இருக்கிறார்கள். இக்கிரகத்தின் மின்சக்தியே பெண் உறவுகளைப் பற்றியது என

சொல்லப்பட்டுள்ளது. இச்சக்தி குறைந்தவர்களுக்கு சந்ததிகள் வாய்ப்பதில்லை. இச்சக்தியே அனைத்து கலைகளுக்கும், அழகுக்கும் காரணமாக அமைவதாக சொல்லப்பட்டுள்ளது.

**சனி**

இக்கிரகத்தின் மின்சக்தியிலிருந்து மனித உடம்பில் எழும்பு, பல் போன்ற உறுப்புகள் வளர்ச்சிக்கு காரணமான கால்சியம் உற்பத்தியாகிறது.

மேலும் இக்கிரகத்தின் மின்சக்தியை வைத்து மனித உடம்பில் இயங்கும் ஆன்மாவின் (உயில்) காலம் அறியப்படுகிறது. இக்கிரகத்தின் மின்சக்தி மனித வாழ்க்கையில் பல இன்னல்களையும், அவஸ்தைகளையும் அதன்மூலம் வாழ்க்கை பற்றிய விழிப்புணர்வும், தெளிவும் அமைய காரணமாகிறது. இக்கிரகத்தின் மின்சக்தியில் இருந்து மனித உடம்பிற்கு குளிர்ச்சி உண்டாகிறது.

**செவ்வாய்:-**

இக்கிரகத்தின் மின்சக்தி மனித உடம்பில் உஷ்ணத்தையும், இரத்த நாளங்களையும் இயக்குகிறது என்று சொல்லப்பட்டுள்ளது. இக்கிரக மின்சக்தியின் உஷ்ணமே கோப உணர்ச்சியாக மாற்றப்பட்டு சண்டை, போர் ஏற்பட காரணமாகிறது.

ஒன்பது கிரகத்தின் மின்சக்தி பூமியில் மனித உடல் தவிர வேறு எந்தெந்த பொருட்களில் பரவி கிடக்கிறது என்பது பற்றி....

**சூரியன்:-** இக்கிரகத்தின் மின்சக்தி பூமியில் அலுமினியா, இரும்பு ஆக்ஸைடு, சிலிகா, மெக்னீசியா, லித்தியம், மைக்கா, மக்னீசியம் ஆக்ஸைடு, அலுமினியம் இணைந்த ஆக்ஸைடு போன்ற இரசாயனங்களில் மிகுந்து இருக்கிறது.

மேலும் மேற்கண்ட இரசாயனப் பொருட்களில் இருந்து மண்ணில் கிடைக்கும் கற்களே மாணிக்கம், டர்மலின், ஸ்பின்னல் என்று அழைக்கப்படுகின்றன. மேலும் சூரியனின் மின்சக்தியை ஆகர்ஷணம் செய்வதற்கு இத்தகைய கற்களை அணியும் பழக்கமும் ஏற்பட்டது.

இக்கிரகத்தின் மின்சக்தி கோதுமை என்ற தானியத்தில் மிகுந்துள்ளது எனவேதான் ஹோமங்களில் கலசம் வைக்கப்படும் பொழுது கோதுமையை பரப்பி அதன் மேல் சூரியனின் கலசத்தினை வைக்கிறார்கள். ஏனென்றால் கோதுமை என்ற தானியம் சூரியனின் மின்சக்தியை ஈர்த்து அது வைக்கப்பட்டிருக்கும் கலசத்தின் நீரில் பரவுகிறது என்பதை நம் மூதாதையர்கள் அறிந்து வைத்திருந்தனர்.

இக்கிரகத்தின் மின்சக்தி செந்தாமரை மலரில் இருக்கிறது. எனவேதான் சூரியனை செந்தாமரை வைத்து வழிபடும் பழக்கம் ஏற்பட்டது இம்மின்சக்தி எறுக்கிலும், தாமிரம் என்ற உலோகத்திலும் மிகுந்து காணப்படுகிறது.

இக்கிரகம் வான் மண்டலத்தில் 30° பாகைகளை கடக்க ஒரு மாதம் எடுத்துக் கொள்கிறது.

இக்கிரகத்தின் மின்சக்தி உடைய ஸ்தலம் ஆடுதுறையாகும். இக்கிரக மின்சக்தி அதிகம் உடைய நாடு பிரிட்டன். சூரியன் ஆதிக்கம் செலுத்தும் கிரகமாதலால் இந்நாடு பல நாடுகளை தங்கள் காலனியாக ஆண்டிருக்கிறது.

**சந்திரன்:-** கடலில் வாழும் சிப்பிகளின் வயிற்றிலிருந்து முத்து பிறக்கின்றது. வானிலிருந்து பொழியும் மழை நீரின் ஒரு துளியும் இரவு நேர சந்திர ஒளியும் சேர்ந்து சிப்பியின் வாயில் வீழ்ந்து பிறகு அவை முத்தாக பரிமாணமாற்றம் ஆகி சந்திரனின் மின்சக்தியை ஆகர்ஷணம் செய்யும் சக்தியை முத்து பெற்றிருக்கிறது.

நெல்லில் சந்திரனின் மின்காந்த அலைகள் அதிகஅளவில் உள்ளது. மேலும் வெள்ளை அல்லி மலரில் இக்கிரகத்தின் மின்காந்த சக்தி மிகுந்து காணப்படுவதால்தான் சந்திரனுக்கு அல்லி மலரில் வழிபாடுமுறை வந்தது.

ஈயம் என்ற உலோகத்தில் இக்கிரகத்தின் மின்சக்தி அதிக அளவில் உள்ளது.

வெள்ளை நிறம் இக்கிரகத்தின் மின்சக்தியை ஆகர்ஷணம் செய்யும் தன்மையுடையது. இக்கிரகத்தின் மின்சக்தி அதீதமாக உள்ள ஸ்தலமே திருப்பதி ஆகும்.

இக்கிரகத்தின் மின்சக்தி அதிகஅளவில் உடைய நாடு கடலும் கடல் சார்ந்த நாடான ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகும்.

**குரு:-** இக்கிரகத்தின் மின்சக்தி மஞ்சள் நிறத்தில் அதிகம் உள்ளது. பூமியில் கிடைக்கும் டோபாஸ், புஷ்பராகம் போன்ற கற்களில் இக்கிரகத்தின் ஆகர்ஷணம் அதிக அளவில் உள்ளது.

இக்கிரகத்தின் மின்சக்தி கடலையிலும் தங்கத்திலும் அதிக அளவில் உள்ளது. இக்கிரக மின்சக்தி முல்லை மலரில் அதிக அளவில் உள்ளது.

அரசமரம் இக்கிரகத்தின் மின்சக்தியை அதிக அளவில் ஆகர்ஷணம் செய்யும் மரமாகும். மேலும் இக்கிரக மின்சக்தியிலிருந்துதான் விந்தில் உயிர் அணுக்கள் ஏற்படுவதால் குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் இம்மரத்தினை சுற்றிவரும் பழக்கம் ஏற்பட்டது. இக்கிரக மின்சக்தி அதீதமாக உள்ள ஸ்தலமே ஆலங்குடி எனப்பட்டது.

**ராகு:-** கோமேதகம் என்ற கல் இக்கிரகத்தின் ஆகர்ஷணத்தை ஈர்க்கும் தன்மையுடையது. இக்கிரக மின்சக்தி கருங்கல்லிலும், காளஹஸ்தி எனும் ஸ்தலத்திலும் அதிக அளவில் உள்ளது.

மந்தாரை மலர் இக்கிரக மின்சக்தியை ஈர்க்கும் சக்தியுடையது. பாம்பு வகை அனைத்திலும் இம்மின்சக்தியே உயிரோட்டமாக உள்ளது. தானியங்களில் உளுந்து இக்கிரக ஆகர்ஷணத்தை பெற்றுள்ளது.

**கேது:-** இக்கிரக மின்சக்தி பூமியில் அலுமினியம் ஆக்ஸைடு, மக்னிசியம் ஆக்ஸைடு, சிலிக் ஆக்ஸைடு, பெரிக் ஆக்ஸைடு ஆகிய இரசாயனப் பொருட்களிலும் அலுமினியா, குளுசினா, குரோடியா, பெர்லியம் ஆக்ஸைடு ஆகிய இராசயனப் பொருட்களிலும் அதிக அளவில் உள்ளது.

மேலும் இந்த இரசாயனத் தாதுப் பொருட்களிலிருந்துதான் வைடூர்யம், டைகர் ஐ போன்ற கற்கள் எடுக்கப்பட்டு இக்கிரக மின்சக்தியினை ஆகர்ஷணம் செய்ய பயன்படுத்தப்படுகிறது.

செவ்வல்லி மலர் இக்கிரக மின்சக்தியினை உடைய மலராகும். இக்கிரக மின்சக்தி அதீதமாக உள்ள ஸ்தலமே காளஹஸ்தியாகும். தர்பைபுல் இக்கிரக மின்சக்தியை கொண்டதாகும்.

**புதன்:-** இக்கிரக மின்சக்தி சிலிக்கா, சோடா, மக்னீசியம் போன்ற இரசாயன கலவையில் மிகுந்து இருக்கின்றன. இதிலிருந்துதான் மரகதம் (Emerald) வெட்டி எடுக்கப்படுகிறது. இம்மரகதக் கல்லே இம்மின்சக்தியை ஆகர்ஷணம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது.

இக்கிரக மின்சக்தி பச்சை நிறத்திலும், பச்சைப் பயிரிலும், வெண்காந்த மலரிலும் அதிக அளவில் உள்ளது.

பித்தளை இக்கிரக ஆகர்ஷணத்தை ஈர்க்கும் உலோகமாகும். திருவெண்காடு இம்மின்சக்தி அதிகம் உடைய ஸ்தலமாகும்.

**சுக்கிரன்:-** திரவங்களில் கரையாததும் வெப்பத்தால் இலகாததுமான வைரம் இக்கிரக மின்சக்தியினை அதிக அளவில் ஆகர்ஷணம் செய்யும் தன்மையுடையது.

இக்கிரக மின்சக்தி பூமியில் சிலிகா, இரும்பு ஆக்ஸைடு ஆகிய இரசாயன தாதுவில் அதிகம் உள்ளது. மேலும் இதிலிருந்துதான் பெரிடாட் என்ற கல் எடுக்கப்பட்டு இக்கிரக மின்சக்தியை ஆகர்ஷணம் செய்ய பயன்படுத்தப்படுகிறது.

இக்கிரக மின்சக்தியின் நிறம் வெண்பட்டு நிறமாகும். வெண்தாமரை மலர் இக்கிரக மின்சக்தியுடையது. இக்கிரக மின்சக்தி அதிகம் உடைய ஸ்தலமே திருநாவலூர் ஆகும்.

**சனி:-** இக்கிரக மின்சக்தி பெரிலியா, பெர்ரஸ் ஆக்ஸைடு, சோடா முதலான இரசாயன பொருட்களில் அதிக அளவில் உள்ளன. இதிலிருந்துதான் நீல கற்களும், அக்வாமரின் (Aqua-marine) லாபிஸ் லசூலி போன்ற கற்கள் எடுக்கப்படுகிறது. இக்கற்களே இக்கிரகத்தின் ஆகர்ஷண சக்திக்கு பயன்படுத்தப்படுகிறது.

இக்கிரக மின்சக்தியினை கொண்ட பறவை, காகம். இக்கிரக மின்சக்தி எள் என்ற தானியத்திலும், நீல நிறங்களிலும் உள்ளது.

இக்கிரக மின்சக்தியினை கருங்குவளை மலர் ஆகர்ஷணம் செய்யும் தன்மையுடையது.

உலோகங்களில் இக்கிரக மின்சக்தியை இரும்பு ஆகர்ஷணம் செய்கிறது. இக்கிரக மின்சக்தி உடைய ஸ்தலமே திருநள்ளாறு ஆகும்.

இக்கிரக மின்சக்தி வன்னி மரத்திலும் ஊஞ்ச மரத்திலும் அதிகம் உள்ளது.

**செவ்வாய்:-** இக்கிரக மின்சக்தியினை கடலில் விளையும் பவளம் ஆகர்ஷணம் செய்யும் தன்மை யுடையது. இக்கிரக மின்சக்தி துவரை பருப்பிலும் சிவப்பு நிறத்திலும் அதிகம் உண்டு.

செண்பகம் பூக்களில் இக்கிரக மின்சக்தி அதீதமாக உள்ளது. செம்பு இம்மின்சக்தியை ஆகர்ஷ்ணம் செய்யும் தன்மையுடையது.

## நியூமராலஜியில் எழுத்துக்கள் வந்தவிதம்

சூரியன் என்ற கிரகத்தின் மின்காந்த அலைகள் ஓம் என்ற பிரணவ நாடியிலிருந்து பூமிக்கு ஐந்த வகையான சப்தங்களை கொண்டு வருவதாக கிரேக்கர்கள் கண்டறிந்தனர். மேலும் அந்த ஐந்து வகையான சப்தங்களும் பூமியில் வெவ்வேறு வகையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்றும் உணர்ந்தனர். எனவே அச்சப்தங்களை வேறுபடுத்தி அறிவதற்காகவே எழுத்துக்களை உருவாக்கினர்.

எனவேதான் இன்று A J I Q Y என்ற வெவ்வேறு ஐந்து சப்தங்களும் சூரியன் என்ற கிரகத்தின் மின்காந்த அலையிலிருந்து பூமிக்கு வருவதால் இந்த எழுத்தினையும் இதன் மூலம் ஏற்படும் சப்தங்களையும் சூரியனுக்குறியவை என்று குறித்துவைத்தனர். அவ்வாறே

B K R - என்ற சப்தம் சந்திரன் என்ற கிரகத்திலிருந்து பூமிக்கும்.

C G L S - என்ற சப்தம் குரு என்ற கிரகத்திலிருந்து பூமிக்கும்

T M D - என்ற சப்தங்கள் இராகு என்ற கிரகத்திலிருந்து பூமிக்கும்

E H N X - என்ற சப்தங்கள் புதன் என்ற கிரகத்திலிருந்து பூமிக்கும்

U V W - என்ற சப்தங்கள் சுக்கிரன் என்ற கிரகத்திலிருந்து பூமிக்கும்

O Z - என்ற சப்தங்கள் கேது என்ற கிரகத்திலிருந்து பூமிக்கும்

P F - என்ற சப்தங்கள் சனி என்ற கிரகத்திலிருந்து பூமிக்கும்.

வருவதனை அறிந்த கிரேக்கர்கள் அந்த சப்தத்தினை வகைபடுத்த எழுத்துக்களையும் அவ்வெழுத்து குறிக்கும் சப்தங்களையும் அவை எக்கிரகத்திலிருந்து வந்தது என அறிந்து அதனை அக்கிரகத்திற்கு உரியவைகளாக குறித்து வைத்த குறிப்புகள்தான் இன்று நாம் பயன்படுத்தும் எழுத்துக்களுக்கான எண்கள் முறையாகும்.

## பெயர் மாற்றினால் மாற்றம் எவ்வாறு நிகழ்கிறது

பெயர் மாற்றுதல் என்றால் பெயரிலுள்ள சப்தங்களை மாற்றுதல் என்று பொருள்.

ஏனெனில் வான மண்டலத்திலிருந்து பூமிக்கு மின்காந்த அலைகளை அனுப்பும் ஒன்பது கிரகங்களும் காற்றின் வழியேதான் மின்காந்த சக்தியினை மனித உடலில் செலுத்தி அதன் மூலம் அக்கிரகத்தின் பணியினை உடம்பில் நடத்துகிறது.

நம் உடம்பில் நடக்கும் அனைத்து உறுப்புகளின் செயல்பாடுகளும் இக்கிரகங்களின் மின்காந்த அலைகளினால்தான் நடக்கிறது. மேலும் இக்கிரகத்தினுடைய மின்காந்த அலை மனித உடம்பினுள் காற்று வழியாக சென்று பல்வேறு உடல் செயல்பாட்டினை செய்விக்கிறது. இதனால்தான் மூச்சுக் காற்றினை அழுத்த பிடித்து கொண்டால் எந்த கிரகத்தினுடைய மின்சக்தியும் காற்றின் வழி செல்ல முடியாமலும் அதன் செயல்பாடு நின்றுபோவதால் உடல் உறுப்புகள் அனைத்தும் உடனே செயலிழந்து மரணம் சம்பவிக்கிறது.

இனி விஷயத்திற்கு வருவோம். RAMU என்ற பெயரை RAMAN என்று மாற்றினால் இப்பெயரின் சப்தங்கள் மாறுபடுகிறது. இங்கே ஒன்றை நினைத்து பாருங்கள். ஒரு சப்தத்தினை உருவாக்க காற்றுதான் அடிப்படை (உதாரணம் விசில் அடித்தல்)

எனவே சப்தத்தில் மாறுதல் ஏற்பட்டால் காற்றிலும் மாற்றம் ஏற்படும். காற்றில் ஒன்பது கிரகத்தினுடைய மின்சக்தி கலந்துள்ளது. எனவே, எந்த சப்தம் பெயரில் மாறுகிறதோ அந்த சப்தம் எந்த கிரகத்திலிருந்து வருகிறதோ அக்கிரகத்தின் மின்சக்தியை மாற்றப்பட்ட பெயரும் அப்பெயரினை உடைய மனிதரும் காற்றின் மூலம் உடலில் பெறுவார்கள்.

இதுதான் எண் கணிதத்தின் அடிப்படை. எனவே, பெயர் மாற்றல் என்றால் பெயரில் ஆற்றல் உடைய சில சப்தங்களை சேர்த்து அந்த சப்தஅலைகளை உடைய கிரகத்தின் மின்சக்தியை காற்றில் உள்ள பிராண சக்தியின் மூலம் உடல் ஆகர்ஷணம் செய்து அக்கிரகத்தின் மின்சக்திக்கேற்ப உடலும் மனமும் செயல்படுகிறது.

மேலும் பெயர் மாற்றப்படும் மனிதருக்கு எந்த கிரகம் நன்மையைத்தரும் என ஆழ்ந்து அறிந்து அக்கிரகத்தின் சப்தத்தின் பெயரில் கலந்து அக்கிரகத்தின் மின்சக்தியை காற்று வழியே உடல் கிரகத்து நன்மை தரும் செயலே எண்கணிதம்.

இதற்கு ஜாதகமும் கைரேகையும் மிக மிக அவசியம்

## கிழமைகள் அமைத்த முறை:-

சூரியன் என்ற கிரகத்தின் மின்சக்தி உடைய நாள் ஞாயிறு சந்திரன் என்ற கிரகத்தின் மின்சக்தி உடைய நாள் திங்கள் (ஆங்கிலத்தில் MOONS DAY - என்பது மருவி MONDAY ஆனது)

செவ்வாய் கிரகத்தின் மின்சக்தி உடைய நாள் செவ்வாய்கிழமை

புதன் கிரகத்தின் மின்சக்தி உடைய நாள் புதன் கிழமை

குரு கிரகத்தின் மின்சக்தி உடைய நாள் வியாழன் கிழமை

சுக்கிரனின் மின்சக்தி உடைய நாள் வெள்ளிக்கிழமை

சனி (Saturn) கிரகத்தின் மின்சக்தி உடைய நாள் சனிக்கிழமை என கிரேக்கர்கள் அமைத்தனர்.

இதில் ராகு, கேது போன்ற கிரகங்களுக்கு கிழமைகள் அமைக்கப்படவில்லை. மேலும் ஞாயிற்றுக் கிழமையில் பாதி ராகுவின் மின்சக்தி உடைய நாளாகவும், திங்கள் கிழமையில் பாதி கேதுவின் நாளாகவும் கிரேக்கர்கள் பயன்படுத்தியதுதான் தற்சமயம் நாம் பயன்படுத்தும் கிழமை முறை ஆகும்.

## திசை என்பதன் பொருள்:-

ஒவ்வொரு கிரகத்தின் மின்காந்த அலைகள் மனித உடம்பில் செயல்படும் காலமே திசை எனப்படுகிறது.

மேலும் அத்தகைய மின்சக்தி செயல்படும் காலத்தில் அதே மின்சக்தி உடைய மனிதர்கள் தொழில்கள், சிந்தனைகள் ஏற்படும்.

சுக்கிரதிசை இருபது வருடம் என்றால் இக்கிரகத்தின் மின்சக்தி அக்குறிப்பிட்ட மனித உடலில் காற்று வழியே இருபது வருடங்கள் ஊடுருவி இதே மின்சக்தி உடைய மனிதர்களின் தொடர்புகள் தொழில்கள் முதலியவற்றை ஏற்படுத்தி அக்குறிப்பிட்ட மனிதரை வாழ்க்கை உச்சத்திற்கே கொண்டு செல்லும்.

இவ்வாறே ஒவ்வொரு கிரகத்தின் மின்காந்த அலைகள் மனித உடலில் செயல்படும் கால அளவுகள் உண்டு.

## சனி என்ற கிரகத்தைப் பற்றி இதுவரை நீங்கள் அறியாதது:-

இக்கிரகத்தின் மின்சக்தியிலிருந்து மனித உடலில் குளிர்ச்சி ஏற்படுகிறது. மேலும் இக்கிரகத்தின் மின்சக்தியை பயன்படுத்தி குளிர்ச்சியை மனித உடலுக்கு பெறவைக்க இக்கிரகத்தின் மின்சக்தியுடைய தானியமான எள்ளிலிருந்து எடுத்த நல்லெண்ணையை கொண்டு இக்கிரக மின்சக்தியை உடைய நாளான சனிக்கிழமை உச்சந்தலையில் தேய்த்து அதன் மூலம் இக்கிரக சக்தியினை கிரகித்து சரீரம் குளிர்ச்சி அடைகிறது. இதனை நம் மூதாதையர்களின் சனி நீராடு என்ற முதுமொழியையும் ஆத்திச்சூடியில் காணலாம்.

இக்கிரகத்தின் மின்சக்தி பற்றாகுறையினால் வலிப்பு நோய் ஏற்படுகிறது. எனவேதான் இக்கிரக மின்சக்தியை அதீதமாக உடைய இரும்பினை இந்நோய் கண்டவருக்கு கொடுத்ததும் அம்மின்சக்தி உடனே இக்கிரகத்தின் சக்தியை உடலுக்கு தந்து உடனே வலிப்பு நிற்கிறது. வேறு எந்த உலோகத்தினாலும் வலிப்பு நோயை நிறுத்தமுடியாது என்பதனை நாம் அனைவரும் அறிவோம்.

தொட்டிலில் தூங்கும் குழந்தைக்கு தொட்டிலுக்கு கீழ் இரும்பினை போடுவது, இம்மின்சக்தி உடைய இடத்தில் பேய், பிசாசு, போன்ற பூத கரங்கள் நெருங்காது என்பதற்கே

மேலும் பேய்பிடத்தவரின் முடியினை வேரோடு பிடுங்கி அம்முடியை இரும்பு ஆணியில் சுற்றி ஊஞ்ச மரத்தில் அடித்து அப்பேய் கண்டவரை குணப்படுத்தும் முறை இன்னும் நம் கிராமப்புரங்களில் காணலாம்.

இதன் தாத்பரியம் என்னவென்றால் நம்முடியில் நம் உடம்பில் இயங்கும் மின்சக்தி இருக்கும். இதனை வேரோடு பிடுங்கும்பொழுது அம்முடிக்கும் அது பிடுங்கப்பட்ட உடலுக்கும் ஒரு மின்காந்த தொடர்பு இருக்கும். அதனை இக்கிரக மின்சக்தி உடைய இரும்பு ஆணியில் சுற்றும்பொழுது அந்த இரும்பில் இயங்கும் மின்காந்தமும் அம்முடி பிடுக்கப்பட்ட உடலுக்கும் செல்லும். மேலும் இம்மின்சக்தி அதிகமுடைய ஊஞ்சமரத்தில் அந்த இரும்பு ஆணியை முடியுடன் அடிக்கும் பொழுது இக்கிரக மின்சக்தி முடியில் இயங்கும் மின்காந்தம் வழியாக அது பிடுங்கப்பட்ட உடலுக்கு சென்று பேய், பிசாசு போன்றவற்றை அகலச் செய்வதும் இப்படித்தான்.

பேய், பிசாசு, ஆவிகள் என்பனவயெல்லாம் யாதெனில் ரத்தமும் சதையுமான மனித உடல் இறந்த பிறகு அதை இயக்கிய சூட்சம சரீரங்களேயாகும்.

இவை மனித உடலின் அழிவிற்கு பிறகு அதிலிருந்து வெளியேறி பின்னர் அதன் தன்மை உடைய மனிதர்கள் உடலில் புகுந்துவிடும்பொழுது ஏற்படும் நிகழ்ச்சியே பேய் பிடித்தல் எனப்படுவது. மேலும் சனி கிரகத்தின் மின்சக்தியினை இவ்வித பாதிப்பு உள்ளவர்களுக்கு இக்கிரகத்தின் மின்சக்தியினை உடைய இரும்பினை பயன்படுத்துவதன் தத்துவம் இவ்வாறே வந்தது.

## எண் 18 பற்றிய விளக்கம்:- தெரிந்து கொள்ள வேண்டிய விளக்கம்

18 என்றால் சூரியன் என்ற கிரகமும் சனி மற்றும் செவ்வாய் என்ற கிரகமும் சேர்ந்த மின்சக்தியுடைய நாள்தான் 18ம் தேதி என்பது இது ஏன் போர்க்களமான எண்ணாக கருதப்படுகிற தென்றல் சூரியன் ஆக்க சக்தியும் வேகமும் உடைய கிரகம். சனி அழிவு சக்தியினை உடைய கிரகம் செவ்வாய் உஷ்ணசக்தியை கோப உணர்ச்சியாக மாற்றி சண்டையை தூண்டும் கிரகம் எனவே இம்மூன்று மின்சக்தியும் பூமியில் இருக்கக்கூடிய நாளும் இம்மின்சக்தியை பயன்படுத்தும் மனிதரும் தேசமும் சண்டை சச்சரவாகவே இருக்கும் என்பதற்கு உதாரணம்.

**SRI LANKA**
**321 31 521 = 18**

- இந்நாட்டு பெயர் குறிக்கும் சப்தமும், அந்த சப்தத்தினால் ஒன்றினையும் சூரியன், சனி, செவ்வாய் கிரகத்தின் மின்சக்தியும் அங்கே இன்றும் அழிவையே தருகிறது.

இவ்வாறே இந்தியாவில்

**KASHMIR**
**2135412 - 18** என்ற இடம்

இவ்வெண் பெயராக வந்தால் அப்பெயரில் இம்மூன்று மின்சக்தியையும் காற்று வழியே கிரகித்து மனிதனை படாதபாடு படுத்தி பெரிய சண்டைக்கு இட்டுச் செல்லும் என்பதற்கு மாற்று கருத்து கிடையாது.

இதன் அடிப்படையே மகா்பாரத போரில் 18 சைல்கள் யுத்தம் புரிந்ததாக கூறப்படுகிறது. ஆடி 18 போர்க்கள மாதம் என்பதும் இதன் தாத்பரியமே.

## புத்திர கோளாறு உடைய எண் 16 பற்றி: -

சூரியன், சுக்கிரன், கேது இம்மூன்று கிரக மின்சக்தியை உடைய்ய நாளில் பிறந்தவர்கள்தான் 16-ம் தேதி பிறந்தவர்கள்.

இதில் சூரியன் உஷ்ணத்தை உடைய கிரகம், கேது மனித உடலில் விந்து நீர்ப்புக்கு காரணமான கிரகம். சுக்கிரன் விந்து உற்பத்திக்கு காரணமான கிரகம் இம்மூன்று கிரகமும் ஒன்றுசேரும் போழுது சுக்கிரன் கிரகத்தின் மின்சக்தி மூலம் உற்பத்தியாகும் விந்து முழுமையாக நீர்த்துவிடும்.

எனவே இம்மின்சக்தி உடைய நாளில் (16-ம் தேதி) பிறந்தவர்களுக்கு புத்ர பாக்ய கோளாறும் வலுவான.சரீரமற்ற குழந்தைகளும் பிறப்பது போன்றவையும் இதனாலேயே நிகழ்கிறது.

மேலும் இதே மின்சக்தி (16ம் தேதி) உடைய நாளில் பிறந்தவர் இதே மின்சக்தி உடைய நாளில் பிறந்தவரை திருமணம் செய்தால் ஒருபோதும் புத்ரபாக்கியம் கிடைக்காது என்பது இன்றளவும் உண்மை.

## சப்தங்களின் சூட்சுமம் பற்றி அறிய புரோனாலஜி என்ற கலை இன்றியமையாதது.

சப்தங்களைப் பற்றி ஆய்வுசெய்யும் கலையே புரோனாலஜி எனப்படும். இந்தக் கலை கிரேக்க நாட்டில் வளர்ந்து மேலும் கிரேக்கமொழி இறைவனுடைய மொழி என்ற இன்றளவும் கூறப்படுகிறது.

ஏனெனில் இம்மொழி சப்தங்களையும் அதனால் ஏற்படும் தாக்கங்களையும் அடிப்படையாக கொண்டது. உதாரணமாக இம்மொழியில் DI, DHI, DE எனும் சப்தங்கள் திடீர் மரணத்தையும், ஆபத்தையும் ஏற்படுத்தும் என்று கூறப்பட்டுள்ளது. இது எந்தளவிற்கு என்பதற்கு சில உதாரணங்கள்.

IN**DHI**RA GAN**DHI**

RAJIV GAN**DHI**

SANJAY GAN**DHI**

MAHATHMA GAN**DHI**

**DI**VYA BHARA**THI**

PHOOLAN **DE**VI

KING **DI**PEN **DI**RA

KING **DI**RENDI**RA**

DO**DI**

**DI**ANA

KENNE**DY**

I**DI**AMIN

இப்பெயருடைய அனைவருமே திடீர் மரணம் சம்பவித்தவர்கள் என்பதனை நாம் அறிவோம்.

இதுபோல் பெயரில் எவ்வகையான சப்தங்களை தரும் எழுத்துக்கள் உயர்வையும் செல்வத்தையும் தரும் எனவும் குறிப்பு உள்ளது

கிரேக்கமொழியில் DI, DHI, DE போன்ற சப்தங்கள் அழிவை ஏற்படுத்துவதாக குறித்த குறிப்பே பின்னாளில் ஆங்கில மொழி உருவாக அடிப்படையானது.

உதாரணமாக எதிர்மறை வார்த்தைகளான

Danger, Devil, Destroy, Death, Die, Divorce, Dissaster, dim, Dispose, Default, Dilemma,

Diminish அனைத்தும் de, dhi, de என்னும் சப்தத்தின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் ஆங்கில மொழி உருவானதற்கு கிரேக்க மொழியே அடிப்படை என்பது உண்மை.

கிரேக்க மொழியானது இயற்கையின் சப்தங்களில் ஏற்படும் மாற்றங்களையும் அவை ஏற்படுத்தும் உணர்வுகளையும், செயல்பாடுகளையும் அடிப்படையாக கொண்டது மொழியாகும்.

எவருடைய பெயராக இருந்தாலும் பெயரில் WAR, UN, ILL, DI, DHI, DE, LO, NO, NAN, NR, SS, RK, DM, REST, RUN, END, HIT, NR, NL, NIL, OO, RP, RUP, CUT, HELL MAT, SAT, FIRE போன்ற சப்தங்களை குறிக்கும் எழுத்துக்களை தவிர்க்கவும் இதுபோல் இலட்சக்கணக்கான சப்தங்களையும் அவை பாதிப்பு ஏற்படுத்தும் காலங்களையும், புரோனாலஜி என்ற கலை மிக தெளிவாக விளக்குகிறது.

## கிரகங்களுக்கும் சப்தங்களுக்கும் உள்ள தொடர்பு:-

ஒவ்வொரு கிரகத்திலிருந்தும் பூமிக்கு மின்காந்த அலைகள் வருகிறது என்றும், அவ்வகையான மின்காந்த அலைகள் பூமியில் பலவகையான சப்த அலைகளை ஏற்படுத்துகிறது என்றும் கிரேக்கர்கள் கண்டறிந்தனர். எனவே அவ்வகையான சப்தங்களை வேறுபடுத்தி அதன் தன்மைகளை அறிய எழுத்துகளை உருவாக்கினார்கள் அவை

| கிரகம் | | கிரகத்தினால் ஏற்படும் சப்தமும் அதன் எழுத்துக்களும் எண்களும் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | - | A | J | I | Q | Y | - | 1 |
| சந்திரன் | - | B | K | R | | | - | 2 |
| குரு | - | C | G | L | S | | - | 3 |
| ராகு | - | D | M | T | | | - | 4 |
| புதன் | - | E | H | N | X | | - | 5 |
| சுக்கிரன் | - | U | V | W | | | - | 6 |
| கேது | - | O | Z | | | | - | 7 |
| சனி | - | P | F | | | | - | 8 |

சப்தங்களுக்குத்தான் எழுத்துக்கள் உருவாக்கப்பட்டனவேயன்றி மொழிக்காக அல்ல என்பதன் நாம் உணர வேண்டும். எனவே ஒவ்வொரு சப்தங்களையும் வேறுபடுத்த அவற்றிற்கு எழுத்துகள் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டது.

இந்தக் கலை சப்தங்களையும் அதன்மூலம் ஏற்படும் நிகழ்வுகளையும் கூறுகிறதேயன்றி எந்த மொழிக்கு இந்த கலை சொந்தம் என்பது பற்றியல்ல.

## ஆங்கிலேயர்கள், கிரேக்கர்கள் இன்றளவும் பயன்படுத்தும் புரோனாலஜி (NAME CHART) முறை:-

நம் ஒவ்வொருவருடைய பெயருக்கும் ஒரு ஜாதகம் உண்டு. இதற்கு Name Chart என்று பெயர். இம்முறையின் நம் வாழ்க்கைக்கு தொழில், கல்வி, செல்வம், வீரம், புத்திர பாக்கியம்,

அதிர்ஷ்டம், வீடு, வெளிநாடு, புகழ் இவற்றில் எதை நாம் அடைய விரும்புகிறோமோ அதற்கேற்றார்போல் நம் பெயரினை இந்த Name Chart முறையில் அமைத்து நம் வாழ்வின் குறிக்கோளை எளிதில் அடையலாம்.

Name Chart என்பது நம் பெயரில் உள்ள எழுத்துக்களையும், அது குறிக்கும் சப்தங்களையும் எத்தனை டிகிரியில் அமைத்துக் கொண்டால் வாழ்க்கை சிறக்கும் என்பதனை ஆதாரபூர்வமாக கூறும் ஒரு முறையாகும்.

இந்த Name Chart அமைக்கும்பொழுது 1, 2, 3, 4, 5, 7, 9, 10, 11 போன்ற இடங்களில் நல்ல எழுத்துக்களை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை என்றும் வளமும் ஆனந்தமும் கொண்டதாக அமையும். Name Chart-ல் எழுத்துக்களை அமைக்கும்பொழுது (மேஷத்திலிருந்து எண்ணி) மேற்கூறியவாறு நல்ல இடங்களில் அமைத்துக் கொள்ளவும்.

நம்முடைய கர்மாவை இயக்கும் ஜாதகத்தினை மாற்ற இயலாது. ஆனால் பெயர் அமைக்கும் பொழுது Name Chart முறையில் நல்ல இடத்தில் நல்ல பெயரொலியுடன் எழுத்துக்களை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை என்றும் சீரும் சிறப்புமாக இருக்கும்.

Name Chart முறையில் நல்ல இடங்களில் எழுத்துக்கள் வருமாறு அமைத்துக் கொண்டால் தொழிலில் மிக மேலான வருமானத்தை பெற்றிட முடியும்.

## RAJINI KANT

| | | | |
|---|---|---|---|
| (12) 330°-360° | (1) 0-30° | (2) 30-60° | (3) 60°-90° |
| (11) 300°-330° T | | | (4) 90°-120° |
| (10) 270°-300° N | | | (5) 120°-150° II |
| (9) 240°-270° RAJN | (8) 210°-240° | (7) 180°-210° | (6) 150°-180° KA |

(1) இதில் 120° to 150° -ல் I, I என்ற சப்தங்கள் வருவதால் இவரது பூர்வ புண்ணியம் பலப்பட்டு இருக்கிறது.

(2) 150° to 180° -ல் K A என்ற எழுத்துக்கள் கடன், விரோதிசத்ரு, தைரிய ஸ்தானங்களை என்றும் பாதுகாப்பதாக உள்ளது.

(3) 240° to 270° -ல் உள்ள RAJN எனும் எழுத்துக்கள் மிகுந்த புகழினையும் செல்வாக்கையும் கொடுத்துள்ளது.

(4) 270° to 300° -ல் N என்ற எழுத்து வருவதால் தொழிலில் நிரந்தரமாக இருக்க வகை செய்கிறது.

(5) 300° to 330° -ல் (லாபஸ்தானத்தில் I என்ற எழுத்து வருவதால் ஏராளமான பணம் குவிக்க முடிகிறது.

(6) 210° to 240° -ல் எழுத்துக்கள் இல்லாததால் ஆயுள் பலம் அதிகரிக்க உதவும்.

(7) 330° to 360° -ல் எழுத்துக்கள் இல்லாததால் இவரது புகழ் என்றும் அழியாது.

**கவனிக்க வேண்டிய குறிப்பு:-**

(1) 150° to 180°, 210° to 240°, 330° to 360° -ல் நல்ல எழுத்துகள் அமையாமல் சுத்தமாக இருப்பது நன்று

(2) 240° to 270°, 270° to 300°-ல் எந்த அளவுக்கு எழுத்துக்கள் உள்ளதோ அந்த அளவுக்கு செய்யும் தொழிலில் மிக மேலான பலன் உண்டு.

Name Chart முறையில் நல்ல நிலையில் இருக்கும் சில தொழில் நிறுவனங்கள்.

## தினத்தந்தி : THINATHANTHI

**451514515451 = 41**

| | | | |
|---|---|---|---|
| (12) 330°-360° | (1) 0-30° I | (2) 30-60° T | (3) 60°-90° |
| (11) 300°-330° | | | (4) 90°-120° |
| (10) 270°-300° TT | | | (5) 120°-150° IAH H |
| (9) 240°-270° HNAN | (8) 210°-240° | (7) 180°-210° | (6) 150°-180° |

1. 0° to 30°- ல் I என்ற எழுத்து வருவது தொழிலில் நீடித்த தன்மையை குறிக்கும்.
2. 30° to 60°- ல் T என்ற எழுத்து வருவதால் எப்போதும் நிலையான வருமானத்தை பெற்றிருக்கிறது.
3. 120° to 150° - ல் IHAH என்ற எழுத்துக்கள் வருவதால் பாரம்பரியம் பெற்றுள்ளது.
4. 240° to 270°- ல் HNAN என்ற எழுத்துக்கள் வருவதால் புகழ்பெற்ற முன்னனி நாளிதழாக உள்ளது.
5. 270° to 300°- ல் TT என்ற எழுத்துக்கள் வருவதால் அதிகமான வாசகர்களைக் கொண்டுள்ளது.

## ARUN ICE CREAMS

1 2 6 5 1 3 5  3 2 5 1 4 3 = 41

| | | | |
|---|---|---|---|
| (12) 330°-360° | (1) 0-30° AC | (2) 30-60° | (3) 60°-90° RN |
| (11) 300°-330° IU | | | (4) 90°-120° |
| (10) 270°-300° SM | | | (5) 120°-150° E |
| (9) 240°-270° R | (8) 210°-240° | (7) 180°-210° CEA | (6) 150°-180° |

1. $0^0$ to $30^0$ - ல் AC என்ற எழுத்து வருவதால் தொழிலில் நீடித்த தன்மையை குறிக்கும்.
2. $60^0$ to $90^0$ - ல் RN என்ற எழுத்து வருவதால் மக்களிடத்தில் விரைவாக பிரபலமானது.
3. $120^0$ to $150^0$ - ல் E என்ற எழுத்து வருவது பாரம்பரியத்தை குறிக்கிறது.
4. $180^0$ to $210^0$ - ல் CEA என்ற எழுத்து வருவது அதிகமான விசேஷங்களுக்கும், திருமணங்களுக்கும் ஏற்படும் தேவையினை குறிக்கிறது.
5. $240^0$ to $270^0$ - ல் R என்ற எழுத்தும், $270^0$ to $300^0$ - ல் S M என்ற எழுத்தும் $300^0$ to $330^0$ - ல் IU என்ற எழுத்தும் முறையே புகழினையும், வருவாயையும் கடல் கடந்து வாணிபம் செய்வதையும் குறிக்கிறது.
6. $150^0$ to $180^0$, $210^0$ to $240^0$, $330^0$ to $360^0$ - போன்ற மறைவு ஸ்தான கோணங்களில் எழுத்துக்கள் இல்லாதது சிறப்பு.

**பின் குறிப்பு:-**

இந்த Name Chart அமைக்கும் முறையினை அடுத்த புத்தகத்தில் விரிவாக எழுதுகிறோம்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையின் விதியை தீர்மானிக்கும் பிறந்த தேதியின் ஐந்து முக்கிய எண்கள்:- மிகவும் விழிப்புணர்வூட்டும் செய்தி

நம்முடைய ஒவ்வொருவரின் பிறந்த தேதியிலேயே நம்முடைய வாழ்வின் வளமை, தொழில், முடிவு அனைத்தும் அடங்கி உள்ளன.

நம் ஒவ்வொருவருக்கும் நம்முடைய பிறந்த தேதிக்கேற்ப ஐந்து எண்கள் உண்டு. அதனை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் அத்தகைய எண்களுக்கும் நடைமுறை

வாழ்க்கைக்கும் எந்த அளவு தொடர்பு இருக்கிறது என்பதனை தெரிந்துகொண்டால்தான் இதன் அவசியம் புரியும்.

**அவை:-**

1. பிறப்பு எண் : (பிறந்த தேதியின் எண்)
2. விதி எண் : (பிறந்ததேதி + மாதம் + வருடம்) மூன்றையும் கூட்டிவரும் எண்
3. உதவி எண் : பிறந்த கிழமையின் எண்
4. தொழில் எண் : (பிறப்பு எண், விதி எண், உதவிஎண் இம்மூன்றையும் கூட்டி வரும் எண்)
5. வாழ்க்கை எண் : (பிறப்பு எண், விதி எண், தொழில் எண் இம்மூன்றையும் கூட்டிவரும் எண்)

## இதன் மூலம் உணரப்படும் விஷயம் யாதெனில்:-

### 1. பிறப்பு எண்: -

ஒவ்வொருவருடைய குணம், தோற்றம், அழகு, இளமைப்பருவம் ஆகியவற்றினை அறிய உதவும் எண்.

### 2. விதி எண்:-

ஒவ்வொருவருடைய எதிர்கால வாழ்க்கை எவ்வாறு அமையும் என்பதனை இந்த எண் காட்டும்.

### 3. உதவி எண்: -

இதற்கென தனி பலன்கள் கிடையாது.

### 4. தொழில் எண்:-

ஒருவர் செய்யும் தொழிலையும், அதன்மூலம் பெரும் வருவாயையும், உயர்வினையும், அத்தொழிலின் தன்மையினையும் இவ்வெண்மூலம் அறிந்து கொள்ளலாம்.

### 5. வாழ்க்கை எண்:-

ஒருவருடைய வாழ்க்கையின் நிலை என்ன என்பதனை கூறுவது. வாழ்வில் நிகழும் சுக துக்க நிகழ்ச்சிகளையும், ஆயுளையும் மேற்கோள் காட்டுவது இந்த எண்.

மேலும் மேற்கண்ட இந்த ஐந்து எண்களின்படிதான் வாழ்க்கை அமைகிறதா என்பதற்கு சில ஆதாரங்கள் இதோ .......

## 1. திரு. கலைஞர் மு. கருணாநிதி

| | | |
|---|---|---|
| இவரின் பிறந்த தேதி | : | **3.6.1924** செவ்வாய்கிழமை |
| 1. பிறப்பு எண் | : | **3** |
| 2. விதி எண் | : | **7 & 25** |
| 3. உதவி எண் | : | **9** *(செவ்வாய்)* |
| 4. தொழில் எண் | : | **1 - 19** |
| 5. வாழ்க்கை எண் | : | **2 - 11** |

## தொழில் எண் : 19-க்கான பலன்

சூரியன் உருவம் தான் இந்த எண்ணின் சின்னம். இந்த எண்ணிற்கு தேவலோகத்தில் அரசகுமாரன் என்று பொருள் தரப்பட்டுள்ளது. இதனால் குறிக்கப்படும் மனிதர்கள் வயது ஏற ஏற மென் மேலும் பிரகாசமடைந்து இராஜயோக பலன்களையே அடைவார் என்பதை இவ்வெண் உணர்த்துகிறது.

இவ்வெண் குறிக்கும் மனிதர்களுக்கு பட்டம், ராஜ்யம், பதவி அந்தஸ்து அளிக்கப்படும் எனவும் இவை நோக்கியே வாழ்க்கைப்பாதை அமையும் என்பதனையும் இவ்வெண் உணர்த்துகிறது.

இந்த எண்ணின் பலன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 19-என்ற எண்ணை தொழில் எண்ணாக கொண்டவர்களும், பிறந்த தேதியாக கொண்டவர்களும் அரசாள்வார்கள்.

## மேலும் சில உதாரணங்கள்:-

### அமரர் திருமதி. இந்திரா காந்தி

பிறந்த தேதி:- **19-11-1917** - திங்கட்கிழமை

### அமரர்திரு காமராஜர்

பிறந்த தேதி:- **15-7-1903** - புதன்கிழமை

தொழில் எண்:- **19**

### திரு. பில்கிளிண்டன்: -

பிறந்த தேதி - **19**

### திரு. ரஜினி காந்த் அவர்கள்:-

| | | |
|---|---|---|
| பிறந்த தேதி | : | **12-12-1950** - செவ்வாய்கிழமை |
| பிறப்பு எண் | : | **3** |
| விதி எண் | : | **3 - 21** |
| உதவி எண் | : | **9** |
| தொழில் எண் | : | **6 - 15** |
| வாழ்க்கை எண் | : | **3 - 12** |

## இவருடைய தொழில் எண் 15க்கான பலன்கள்:-

இந்த எண்ணால் குறிக்கப்படும் மனிதர்கள் உலகிலுள்ள எல்லா சுக நலன்களையும், அனுபவிக்கப் பிறந்தவர்கள்.

மாயாஜால சக்தியும், கவர்ச்சியும், வசியமும் கொண்டது. இந்த எண் சார்ந்தவர்கள் தன்னுடைய வசியம் கலந்த பேச்சாற்றலால் தனக்கென ஒரு உயர்ந்த அந்தஸ்தினை உருவாக்கிக் கொள்வார்கள். பணம் அமுத சுரபி போல் வந்து சேரும். பிறரிடம் இருந்து பணமோ பிற உதவிகளோடு பெறுவதற்கு இது மிகச் சிறப்பான எண்.

### அமரர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்

| | | |
|---|---|---|
| பிறந்த தேதி | : | **17-1-1917** - புதன்கிழமை |
| பிறப்பு எண் | : | **8 - 17** |
| விதி எண் | : | **9 - 27** |
| உதவி எண் | : | **5** - புதன்கிழமை |
| தொழில் எண் | : | **4 - 22** |
| வாழ்க்கை எண் | : | **3 - 21** |

## வாழ்க்கை எண் : 21-ன் பலன்கள்:-

வாழ்வின் முற்பகுதி சோதனைகளால் நிரம்பியும் பிற்பகுதி சாதனைகளை கொண்டதா இருக்கும். இந்த எண்ணை உடையவர்களுக்கு செல்வம், குடும்ப வாழ்க்கை நிரந்தரமான பத எப்பொழுதும் உண்டு.

மேலும் பழங்காலத்திலும், எகிப்திலும் இந்த எண்ணிற்கு மணி மகுடம் என்ற பொரு தரப்பட்டுள்ளது. இயற்கையின் பல்வேறு சோதனைகளில் இருந்து மீண்டு பார் புரோகிதனுக்கு மணிமகுடம் சூட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பு உள்ளது.

### அமரர் திரு. ராஜீவ் காந்தி:-

| | | |
|---|---|---|
| பிறந்த தேதி | : | **20-8-1944** ஞாயிறு |
| பிறப்பு எண் | : | **2-20** |
| விதி எண் | : | **1-28** |
| உதவி எண் | : | **1** - ஞாயிறு |
| தொழில் எண் | : | **4** |
| வாழ்க்கை எண் | : | **7** |

**தொழில் எண் : 4க்கான பலன்:-**

பழங்கால நூல்களில் இந்த எண்ணிற்கு பேரரசன், மன்னன் சக்ரவர்த்தி என பலன்கள் எழுதப்பட்டுள்ளன. அதே நேரம் இந்த எண்ணால் குறிக்கப்படும் மனிதர்கள் சூழ்ச்சியினால் அஸ்தமிக்கக் கூடிய சூழ்நிலையும் உண்டு எனவும் பொருள் கூறப்பட்டுள்ளது.

**விதி எண் 28-க்கான பலன்:-**

வேகமாக முன்னேறுதலையும் அதே வேகத்தில் அனைத்தும் அஸ்தமிக்கும். சூழ்நிலையும் உருவாகும் என பொருள் தரப்பட்டுள்ளது.

## திரு. பூட்டோ

(முன்னால் பாகிஸ்தான் அதிபர் ஜியா உல் ஹக்கினால் தூக்கிலிடப்பட்டவர்

| | | |
|---|---|---|
| பிறந்த தேதி | : | **5-1-1928** வியாழன் |
| பிறப்பு எண் | : | **5** |
| விதி எண் | : | **8 - 26** |
| உதவி எண் | : | **3** |
| தொழில் எண் | : | **7 - 16** |
| வாழ்க்கை எண் | : | **2 - 20** |

**தொழில் எண் : 16ன் பலன்**

பண்டைய காலத்தில் இந்த எண்ணிற்கு இடியினால் தாக்கப்பட்டு ஒரு கோபுரம் தகர்க்கப் படுவதையும், அதன் உச்சியிலிருந்து மணிமகுடம் சூட்டிய மன்னன் ஒருவன் தலை குப்பு விழுவதையும் குறிக்கப்பட்டுள்ளது.

## உலகப்புகழ் பெற்ற கணிதமேதை S.ராமானுஜம்

| | | |
|---|---|---|
| பிறந்த தேதி | : | **22-12-1887** - செவ்வாய்கிழமை |
| பிறப்பு எண் | : | **4** |
| விதி எண் | : | **4 - 31** |
| உதவி எண் | : | **9** |
| தொழில் எண் | : | **8 - 17** |
| வாழ்க்கை எண் | : | **7 - 16** |

## வாழ்க்கை எண் : 16-ன் பலன்:-

இது மிக வேகமாக முன்னேற்றத்தையும் அதே சமயம் தலைகீழே விழுவதையும் குறிக்கிறது. பழங்கால நூல்களில் ஓர் உயர்ந்த கோபுரமும் அதன் உச்சியில் கிரீடம் தரித்த மன்னனும் இடி மின்னலால் தாக்கப்பட்டு வீழ்வதையும் சித்தரிக்கிறது. அவ்வாறே இளம் வயதில் புகழ் பெற்ற கணிதமேதை ராமானுஜம் பருவ காலத்திலேயே இறக்க நேர்ந்தது.

### திரு. ரஜனீஸ் ஓஷோ

| | | |
|---|---|---|
| பிறந்த தேதி | : | **11-12-1931** - வெள்ளிக்கிழமை |
| பிறப்பு எண் | : | **2 - 11** |
| விதி எண் | : | **1 - 19** |
| உதவி எண் | : | **6** |
| தொழில் எண் | : | **9** |
| வாழ்க்கை எண் | : | **3 - 12** |

## தொழில் எண் : 9-க்கான பலன்:-

பண்டைய நூல்களிலும், ஓலைச் சுவடிகளிலும் இந்த எண்ணைக் கொண்டவர்க ''விவேகமான துறவி'' என இந்த எண்ணைப்பற்றி குறிப்பிடுகிறார்கள்.

தனக்குள் ஏற்பட்ட உள்ஒளி ஞானத்தினை இந்த உலகத்திற்கும் இந்த ஞானத்திற்கா ஏங்குபவர்களுக்கு அதனை அளிப்பதன் பொருட்டு வாழும் துறவியை பற்றி இந்த எண்ணி கூறுகிறார்கள்.

### சுவாமி விவேகானந்தர்

| | | |
|---|---|---|
| பிறந்த தேதி | : | **12-1-1863** - திங்கள் |
| பிறப்பு எண் | : | **3 - 12** |
| விதி எண் | : | **4 - 22** |
| உதவி எண் | : | **2** |
| தொழில் எண் | : | **9** |
| வாழ்க்கை எண் | : | **7 - 16** |

## தொழில் எண் : 9க்கான பலன்

பண்டைய நூல்களிலும், ஓலைச் சுவடிகளிலும் இந்த எண்ணைக் கொண்டவர்கள் ''விவேகமான துறவி'' என இந்த எண்ணைப்பற்றி குறிப்பிடுகிறார்கள்.

தனக்குள் ஏற்பட்ட உள்ஒளி ஞானத்தினை இந்த உலகத்திற்கும் இந்த ஞானத்திற்காக ஏங்குபவர்களுக்கு அதனை அளிப்பதன் பொருட்டு வாழும் துறவியை பற்றி இந்த எண்ணில் கூறுகிறார்கள்.

★ ★ ★

## இம்முறையில் பெயர் மாற்றி 15 தினங்களில் செல்வ வளமை பெற உங்களுக்கு சில நிருபிக்கப்பட்ட அவசியமான குறிப்புகள் :

1. 15 தினங்களில் செல்வ வளமை தரும் முதல்படி உங்களுடைய ஜாதகத்தில் (கிருஷ்ணமூர்த்தி பத்ததி ஜாதகக் குறிப்பில்) உள்ள வலுவான கிரகத்தில் அமைத்துக் கொள்ளவும்.
2. அவ்வாறு அமைக்கப்படும் பெயர், எண், பிறந்ததேதி எண்ணிற்கும், வாழ்க்கை எண்ணிற்கும் பொருந்தியிருக்கவேண்டும்.
3. அவ்வாறு அமைக்கப்பட்ட பெயரினை Name Chart, ஜாதகம் மூலம் 1, 2, 3, 5, 7, 9, 10, 11ம் இடங்களில் வருமாறு அமைத்துக்கொண்டால் வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.
4. Name Chart அமைக்கும்பொழுது $90^0$ - $120^0$,$150^0$ - $180^0$, $210^0$ - $240^0$, $330^0$ - $360^0$ டிகிரியில் எழுத்துக்கள் வராதவாறு அமைத்துக்கொள்ளவும்.

இவ்வாறு அமைத்து வாழ்க்கையை சிறப்பாக அமைத்து மேன்மையடைந்த நிருபிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களின் அனுபவ கடிதங்களில் சில.

## (1) 7, 16, 25 தேதியில் பிறந்தவர்கள் இதே தேதியில் பிறந்தவர்களை மணம் முடித்தால் புத்திர பாக்கியம் ஏற்படுவதில்லை என்பதற்கான காரணம்

7-ம் தேதி என்பது கேதுவின் மின்காந்த அலைகள் பூமியில் நிரம்பியுள்ள நாள்.

16-ம் தேதி என்பது சூரியன், சுக்கிரன், கேது இம்மூன்று கிரகத்தின் மின்காந்த அலைகளை உடைய நாள்

25-ம் தேதி என்பது சந்திரன் புதன் மற்றும் கேதுவின் மின்காந்த அலைகளை உடைய நாள்.

இம்மின்சக்தி பூமியில் உடைய நாளில் பிறந்தவர்களுக்கு அவர்களுடைய பிராணன் வழியாக இம்மின்சக்தி இரத்தத்தில் பரவி இரத்தம் மூலம் உருவாகும் விந்துவினை நீர்த்துப்போகவும், விந்தின் உயிர் சக்தியினை குறைக்கவும் செய்கிறது. எனவே தான் இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்களுக்கு மேற்கூறிய உயிர்சக்திகளின் வீரியம் குறைவாக இருப்பதனால் புத்திர பாக்கியம் ஏற்பட தாமதமாகிறது. எனவேதான் இம்மின்சக்தியில் (அதாவது 7, 16, 25 தேதியில்) பிறந்த இருபாலரும் திருமணம் செய்து கொண்டால் புத்திர பாக்கியம் பெரும்பாலும் ஏற்படுவதில்லை என்பது அனுபவ உண்மை.

### பின்குறிப்பு:-

ஏற்கனவே இம்மின்சக்தியுடைய நாளில் திருமணம் செய்தவர்கள் இவ்வாறு புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் உயிர்சக்தியும், வீரியமும் அதிகம் உடைய மின்சக்தியுடைய எண்களான 24, 33, 42, 69, 27, 45 போன்ற எண்ணில் பெயர் அமைக்கவும். ஆனால் இது சம்பந்தப்பட்ட கிரகங்கள் ஜாதகத்தில் நற்பலன் தருவதாக இருக்க வேண்டும். Name Chart முறையில் பெயரெழுத்துக்கள் 5-ம், 9-ம் இடத்தில் அதிகமாக வருமாறு அமைத்துக் கொள்ளவும்.

## (2) 5, 14, 23 தேதிகளில் திருமணம் செய்தவர்கள் பெருமளவில் மணமுறிவு, மரணம், விவாகரத்து போன்ற காரணங்களால் பிரிய நேரிடுகிறது. காரணம்.

5, 14, 23 தேதி என்பது புதன் கிரகத்தின் மின்சக்தியை பூமியில் அதிகம் கொண்ட நாள்.

ஆதிகாலங்களில் கிரேக்க நாட்டில் இம்மின்சக்தி உடைய நாளில் நடப்பட்ட செடிகள், தாவரங்கள், மரங்கள் எதுவும் நல்ல நிலையில் வளர்ச்சி அடைவதில்லை என கண்டறிந்தனர். மேலும் இம்மின்சக்தி உடைய நாளினை நியூட்ரல் மின்சக்தி உடைய நாள் என குறித்து வைத்துள்ளனர். இதுபற்றி நம் நாட்டு ஜோதிட மூல நூல்களில் புதனை அலிகிரகம் என்று குறித்து வைத்துள்ளனர்.

இம்மின்சக்தி ஆண் தன்மை, பெண் தன்மை இவ்விரண்டு மூலக்கூறுகளையும் பிரிக்கும் தன்மை உடையது என்றும் கிரேக்கர்கள் கண்டறிந்தனர். எனவே இம்மின்சக்தி உடைய நாளில் ஆண், பெண் இருவரும் இணையும் வைபவமான திருமணம் நடந்தால் அது செயலற்ற

நிலைக்கு செல்கிறது என்பது இன்றளவும் உண்மை.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் பேட்டியினை ஆயிரக்கணக்கில் ஆதாரபூர்வமாக வைத்துள்ளோம்.

**பின்குறிப்பு :**

இம்மின்சக்தி உடைய நாளில் திருமணம் புரிந்தவர்கள் வேறு மின்சக்தி உடைய நாளில் மறுமாங்கல்யம் செய்து கொண்டால் வாழ்க்கை சீரும் சிறப்புமாக இருக்கும். மறுமாங்கல்யம் செய்து கொள்ளும் நாள், தேதி இவ்விரண்டும் ஜாதக ரீதியாக ஆய்வு செய்து அமைத்துக் கொள்ளவும்.

## (3) 4, 13, 22, 31 தேதியில் திருமணம் செய்து கொள்பவர்கள் ஆயிரத்தில் ஒருவர் கூட நல்லநிலைமையில் இருப்பதில்லை. காரணம்.

*4, 13, 22, 31* தேதி என்பது ராகு கிரகத்தின் மின்சக்தி பூமியில் உடைய நாள், இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்களுக்கு இம்மின்சக்தியே பிராணன் வழியாக ரத்தத்தில் கலந்து உடலில் நிசுவாக மாறுகிறது. மேலும் இம்மின்சக்தி உடலில் அதிகம் உடையவர்கள் இதே மின்சக்தி உடைய மனிதர்களுடைய தொடர்பை கொண்டு இருக்கிறார்கள். இம்மின்சக்தி மிகவும் துரதிர்ஷ்டமான நண்பர்களையும் எண்ணத் தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது. இம்மின்சக்தி உடைய நாளில் திருமணம் செய்துகொள்ளும் ஆண், பெண் இருபாலரும் இம்மின்சக்தி தொடர்புடைய நாளில் பிறந்தவர்களே. எனவே தான் துரதிர்ஷ்டம் ஏற்படுகிறது.

**பின்குறிப்பு :**

இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்த மற்றும் திருமணம செய்து கொண்டவர்கள் வேறு மின்சக்தி உடைய எண்ணில் பெயர் அமைத்து எல்லா சீரும் சிறப்பும் பெறலாம்.

## (4) 9, 18, 27 தேதியில் பிறந்தவர்கள், பெயரினை 9 எண் வரும்படி அமைத்தவர்களும் காமாலைக்கு ஆட்படுவது ஏன்?

*9, 18, 27* தேதி என்பது செவ்வாய் கிரகத்தின் மின்சக்தி உடைய நாள். இம்மின்சக்தி மிகுந்த உஷ்ணங்களை உடையது. எனவே இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்களுக்கு இம்மின்சக்தி பிராணன் வழியாக உடலுக்குள் சென்று உடலில் அதீத உஷ்ணங்களை ஏற்படுத்துகிறது. மேலும் இம்மின்சக்தியில் பிறந்தவர்களது சரீரம் உஷ்ணத் தன்மையுடையதால் இம்மின்சக்தி உடைய எண்களான *9, 18, 27, 36, 45* போன்ற எண்களில் பெயரமைத்தால் இம்மின்சக்தி அளவுக்கதிகமாக பிராணன் வழியாக இரத்தத்தில் கலந்து சரீரத்தில் அதீத உஷ்ணங்களை ஏற்படுத்தி கணயம், கல்லீரல், ஆகியவற்றின் நீர்மத்தினை வற்றிப்போகச் செய்து இவ்வுறுப்புகள் பாதிப்படைகிறது. அவ்வாறே உடலின் பல்வேறு உறுப்புகளிலும் இதே செயல்கள் நடைபெறுவதால் காமாலை ஏற்படுகிறது.

பின்குறிப்பு:-

இம்மின்சக்தியில் பிறந்தவர்கள் தங்களின் பெயரினை ஜோதிட ரீதியாக ஆய்வு செய்து வேறு மின்சக்தியுடைய கிரகங்களின் எண்களில் பெயரமைத்துக் கொள்ளலாம். மேலும் இப்பிணியினால் பாதிக்கப்பட்டவர்கள் கீழாநெல்லி வேரை பசும்பாலில் அரைத்து நவமி திதியன்று செவ்வாய் ஓரையில் உமிழ் நீருடன் சிறிது சிறிதாக சாப்பிட்டால் மிக விரைவான மாற்றம் ஏற்பட்டு இப்பிணியிலிருந்து மீளலாம்.

## (5) 2, 11, 20, 29, 7, 16, 25 தேதிகளில் பிறந்தவருக்கு மட்டும் ஏன் சர்க்கரை வியாதி வருகிறது.

2, 11, 20, 29 தேதி சந்திரனின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

7, 16, 25 தேதி கேதுவின் மின்சக்தி பூமியில் உடைய நாள்.

இவ்விரு கிரக மின்காந்த அலைகளும் நீர் மின்சக்தியை உடையவை. எனவே, இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்கள் இம்மின்சக்தியை பிராணன் வழியாக சரீரத்தில் அதிகம் பெற்றவர்கள். எனவே, இம்மின்சக்தி நீர் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கும் காரணமாக அமைகிறது. இவ்வகையில் இம்மின் சக்தியுடைய நாளில் பிறந்தவர்களே அதிக அளவில் சக்கரை நோயால் பாதிக்கப்படுகிறார்கள். பொதுவாக இத்தகைய பாதிப்பு சுக்கிரன், செவ்வாய் திசைகளில் நடைபெறுகிறது.

## (6) 2, 11 20, 29 தேதியில் நடப்பட்ட செடிகள் புஷ்டியாகவும், செழிப்பாகவும் வளர்வதன் காரணம் என்ன?

2, 11, 20, 29 தேதிகள் சந்திரனின் நீர்மின்சக்தியை பூமியை உடைய நாள். எனவே, இதே நாளில் நடப்படும் செடிகளும், விதைகளும் இதே நீர்மின்சக்தியை ஊனாக பெற்றுவிடுவதால் அதே சக்தியை ஒவ்வொரு நாளும் பெருக்கி நீர்சக்தி உடைய செடியாக நன்கு வளர்வதால் அது புஷ்டியாகவும், செழிப்பாகவும் வளர்கிறது.

## (7) 10-ம் தேதியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் கண் கண்ணாடி அணிந்திருப்பது ஏன்?

10-ம் தேதி என்பது சூரியனின் மின்சக்தி பூமியில் அதிகம் உள்ள நாள். எனவே, இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்கள் இம்மின்சக்தியை உடலில் ஊனாக பெற்று மேலும் மேலும் சரீரத்தில் சேர்வதால் உடலில் இம்மின்சக்தி அதிக உஷ்ணங்களை ஏற்படுத்தி கண்களை பாதிக்கிறது. எனவேதான் இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்கள் பெருமளவில் கண் பாதிப்புகளையும், ஒற்றை தலைவலியும் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

பின்குறிப்பு :-இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்கள் அவர்களின் பெயர்களை ஜாதக ரீதியாக ஆய்வு செய்து நன்மை தரக்கூடிய கிரகங்களின் எண்களில் அமைத்து பயனடையலாம்.

## (8) 3, 12, 21, 30 தேதிகளில் பிறந்தவர்களுக்கு பெருமளவில் தோல்நோய் வருவதற்கான காரணங்கள்.

3, 12, 21, 30 தேதிகள் குரு என்ற கிரகத்தின் மின்சக்தி பூமியில் உடைய நாள். இம்மின்சக்தி பிராணன் வழியாக மனித உடலுக்குள் சென்று தோல் வளர்ச்சிக்கு காரணமாக அமைகிறது. எனவே இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்கள் இம்மின்சக்தியையே உடலில் ஊனாக பெற்றவர்கள். எனவே மேற்கண்ட நாளில் பிறந்தவர்கள் தங்களின் பெயரினை இம்மின்சக்திக்கு எதிர் மின்சக்தி உடைய 6, 15, 24, 33, 42, 51 மற்றும் 19, 37, 46 போன்ற எண்களில் பெயரமைக்கும் பொழுது இம்மின்சக்தி உடலில் பரவ தடை ஏற்பட்டு அதன் விளைவாக இம்மின்சக்தியின் பணிகள் பாதிக்கப்பட்டு தோல்கள் பல்வேறு வித பாதிப்புகளை அடைகிறது.

## (9) 8, 17, 26 தேதியில் பிறந்தவர்களுக்கும், பெயரினை 8 என்ற எண்ணில் அமைத்தவர்களுக்கும் பற்கள் பாதிக்கப்படுவது எதனால்?

8, 17, 26 தேதிகள் சனி என்ற கிரகத்தின் மின்சக்தி பூமியில் உடைய நாள். இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்கள் இம்மின்சக்தியை உடலில் ஊனாக பெற்றவர்கள். இம்மின்சக்தி மனித உடலில் கால்சியத்தை ஏற்படுத்தி அதன் மூலம் எலும்பு, பற்கள் வளர்ச்சிக்கு காரணமாக அமைகிறது. எனவே, இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்கள் இம்மின்சக்திக்கு எதிர்மின் சக்தி உடைய எண்களான 8, 17, 26, 35, 44 மற்றும் 10, 19, 28, 37, 46 போன்ற எண்ணில் பெயரமைத்தால் இம்மின்சக்தி பரவ உடலில் தடை ஏற்பட்டு எலும்பு, பற்கள் வளர்ச்சி குறைபாட்டிற்கு காரணமாக அமைகிறது.

## (10) விஷம் தீண்டியவரை புளிய மர நிழல் பட்டால் காப்பாற்ற முடியாது என்பது மூதாதையர் வாக்கு. காரணம்.

நம் பண்டை கால வைத்திய முறைகளான சித்த மற்றும் ஆயூர் வேத மருத்துவங்களில் நோய்வாய்பட்டவர்கள் புளியினை உணவுடன் சேர்க்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது ஏனெனில் புளிப்பு சுவை மருந்தின் வீரியத்தினை குறைக்கும் தன்மையுடையது. எலுமிச்சை பழமும் அவ்வாறே. இதன் அடிப்படையில் தான் பாம்பு மற்றும் தேள் போன்ற விஷ ஜந்துக்களால் பாதிக்கப்பட்டவர்கள் புளிய மர நிழலில் நின்றால் அம்மரத்தின் தன்மைகள் அதன் நிழலில் உள்ளவர்கள் உடம்பில் பிராணன் வழியே இரத்தத்தில் கலந்து உடலில் விஷம் மி வேகமாக பரவ ஏதுவாகிறது. எனவே இத்தகைய பாதிப்பு உள்ளவர்கள் புளிய மர நிழலி ஒதுங்குவதை கூடுமானவரை தவிர்த்தல் நன்று.

விஷக்கடி பாதிப்பு உள்ளவர்களும் இதற்கு மருந்து சாப்பிடுபவர்களும் உணவில் போன்ற சுவையினை சேர்க்கக்கூடாது. மேலும் புளிய மர நிழலில் நிற்கவும் கூடாது.

## (11) சனிக்கிழமை எண்ணெய் தேய்த்து குளிக்கச் சொன்னதன் காரணம்.

சனி என்ற கிரகத்தின் மின்சக்தி மிக அதிகமாக உடைய நாள் சனிக்கிழமையாகும். இம்மின்சக்தி மனித உடம்பிற்கு குளிர்ச்சியை தருகிறது என கிரேக்கர்கள் கண்டறிந்தனர்.

இம்மின்சக்தி பூமியில் விளையும் எள் என்ற தானியத்தில் மிக அதிக அளவில் இம்மின்சக்தி உள்ளது. எனவே, உடலுக்கு குளிர்ச்சியை கொண்டு வருவதற்காக இம்மின்சக்தி உடைய நாளான சனிக்கிழமையில் இம்மின்சக்தி அதிகம் உடைய எள் என்ற தானியத்திலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயினை (நல்லெண்ணெய்) உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை மேற்படி நாளில் தேய்த்து இம்மின்சக்தி உடலில் பரவ வழி செய்து அதன் மூலம் சரீரத்தின் உஷ்ண மிகுதியிலிருந்து நம் மூதாதயர்கள் காப்பாற்றினார்கள்.

மேலும், இம்மின்சக்தி உடைய இடங்களில் பேய் பிசாசு போன்ற பூதகணங்கள் அணுகாது என்பதை அறிந்த மூதாதையர்கள் மேற்படி பழக்கத்தினை ஏற்படுத்தினார்கள்.

## (12) நாகதோஷம் இருந்தால் குழந்தை பிறக்காது இது நடைமுறை உண்மை. காரணம்.

ராகு, கேது இவ்விரு கிரகத்தின் மின்காந்த அலைகள் மனித உடம்பில் பிராணன் வழியாக கலந்து சரீரத்தில் விந்து சக்தியினை நீர்த்து போகச் செய்கிறது என கிரேக்கர்கள் கண்டறிந்தனர்.

இம்மின்சக்தி பூமியில் பாம்பு இனங்களில் மிகுந்து இருக்கிறது. எனவே, பாம்பினை அடித்து கொன்றால் அதன் உடலில் இயங்கும் மேற்கண்ட கிரகத்தின் மின்சக்தி அதை அடித்துக் கொன்றவர்களின் சுவாசத்தில் கலந்து சரீரத்தில் விந்து சக்தியினை நீர்த்து போகச் செய்கிறது. இதன் பின்னணியில்தான் இம்மின்சக்தி உடைய பாம்புகளை இந்தியாவில் ராகு, கேதுகளாக வழிபடும் பழக்கம் இன்றளவும் நடைமுறையில் உள்ளது.

இவ்வாறு தான் பாம்பினை அடித்துக் கொன்றால் நாகதோஷம் ஏற்பட்டு விந்து சக்தி சரீரத்தில் நீர்த்துப் போய் குழந்தை பாக்கியம் இல்லாமல் போவதற்கு காரணமாகிறது.

இத்தோஷம் இருப்பதனை நம் ஜாதகத்தில் மிக சுலபமாக அறிந்து கொள்ளலாம்.

## (13) ஆண் குழந்தை வேண்டும் என்பவர்களும், அப்பாக்கியம் இல்லாத வர்களும் ஏன் சஷ்டி திதியில் விரதம் இருக்கிறார்கள். காரணம்.

சஷ்டி என்றால் 6 என்று பொருள். 6 என்பது சுக்கிரன் என்ற கிரகத்தின் தோற்றமாக கிரேக்கர்கள் குறித்து வைத்துள்ளனர்.

சுக்கிரன் என்ற கிரகத்தின் மின்சக்தி பூமியில் அதிகம் உடைய நாளே சஷ்டி ஆகும். மேலும் இக்கிரகத்தின் மின்சக்தி மனித சரீரத்தில் சுவாசத்தின் வழியே ரத்தத்தில் கலந்து விந்து சக்தியினை உற்பத்தி செய்கிறது. இந்த உயிர்சக்தி அதிக வீரியத்துடன் இருந்தால்தான் ஆண் குழந்தை ஏற்படும். எனவேதான் இம்மின்சக்தி உடைய நாளான சஷ்டி திதியில் விரதம் இருக்கும்பொழுது சரீரத்தில் இம்மின்சக்தியின் விரயம் தடுக்கப்பட்டு உடம்பில் உயிர்சக்தியின்

விரயம் தடுக்கப்பட்டு உடம்பில் உயிர்சக்தியின் ஆற்றல் பலமடங்கு பெருக நம் மூதாதையர் அறிந்த வழிகளே மேற்கண்ட சஷ்டி திதி விரதமாகும்.

எனவே மேற்படி நாளில் விரதமிருந்து சரீரத்தில் விந்து சக்தியின் வீரியத்தினை அதிகம் பெற்று ஆண் குழந்தை பெறமுடிகிறது.

## (14) ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்த பெண் ஏன் மாமியாருக்கு ஆகாது. காரணம்.

ஆயில்யம் நட்சத்திரம் என்பது புதன் கிரகத்தின் மின்சக்தி அதிகம் உடைய நாள். இப்புதன் கிரகத்தின் மின்சக்தி சந்திர கிரகத்தின் மின்சக்திக்கு எதிர் தன்மை உடையது. எனவேதான் இம்மின்சக்தியில் பிறந்த பெண்ணை திருமணம் செய்தால் அவ்வாறு திருமணம் செய்தவரின் உடலில் இம்மின்சக்தி தாம்பத்தியத்தின்போது பரவுகிறது. இம்மின்சக்தி பரவிய உடல் இம்மின்சக்திக்கு எதிர்மின் சக்தியாகிய சந்திரனின் மின்சக்தியில் பிறந்த அனைவரிடமும் எல்லா வகையிலும் மனரீதியாகவே விலகிச் செல்லும் நிலை ஏற்படுகிறது. இங்கே நாம் ஒன்றை கவனிக்க வேண்டும். அதாவது சந்திரன் என்பது ஜோதிடத்தில் தாய் ஸ்தானத்தை குறிக்கும். மேலும் அந்த தாயின் புதல்வன் உடலில் சந்திரனின் மின்சக்தி கலந்தவுடன் அது தாயின் உடம்பில் இயங்கும் மின்சக்தியினை பாதிக்கிறது. இதனுடைய அடிப்படையில்தான் ஆயில்ய நட்சத்திரமும் மாமியாருக்கு ஆகாது என்பது வழக்கில் உள்ளது.

## (15) மூல நட்சத்திரம் ஏன் மாமனாருக்கு ஆகாது.

கேது கிரகத்தின் மின்சக்தி பூமியில் அதிகம் உள்ள நாள் மூலநட்சத்திரம் ஆகும். இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்த பெண்ணை மணமுடித்த பிறகு தாம்பத்தியத்தில் இம்மின்சக்தி மணமகனின் சரீரத்தில் கலந்து விடுகிறது. அதற்கு பிறகு இம்மின்சக்தி இதற்கு எதிர்மின் சக்தியாகிய சூரியனின் மின்சக்தியில் பிறந்தவர்களை பார்க்கும் பொழுதே மன ரீதியாக வெறுக்கத் தோன்றுகிறது. ஜோதிடத்தில் சூரியன் என்னும் கிரகம் தந்தையை குறிக்கிறது. எனவேதான் மூலநட்சத்திரத்தில் பிறந்த பெண்ணை மணமுடித்தால் அம்மணமகனுக்கும் இம்மின்சக்தி உடலில் பரவி அம்மணமகனின் தந்தைக்கு எதிர்மின்சக்தியாக செயல்பட வைக்கிறது. இதன் மூலம் தந்தை மகன் உறவு பாதிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் மகனை உருவாக்கிய தந்தையின் உடம்பில் இயங்கும் சூரியனின் மின்சக்தி மகனின் சரீரத்தில் எதிர்மின் சக்தியான கேதுவின் மின்சக்தி பதியும்பொழுது தந்தைக்கு சூரியனின் மின்சக்தியில் தடை ஏற்பட்டு அவர் பல்வேறு பாதிப்புகளை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் அடைகிறார் என்பது இன்றளவும் உண்மை.

## (16) ரோகினி நட்சத்திரம் ஏன் தாய்மாமனுக்கு ஆகாது?

சந்திரனின் மின்சக்தி பூமியில் அதிகம் உடைய நாள் ரோகினி நட்சத்திரம் ஆகும். சந்திரனின் மின்சக்தி புதன் கிரகத்தின் மின்சக்திக்கு எதிரானது. எனவேதான் இம்மின்சக்தியில் பிறந்த குழந்தை இம்மின்சக்திக்கு எதிர்மின்சக்தியான புதன் கிரகத்தின் மின்சக்தியை கொண்ட தாய்மாமானை பாதிக்கிறது. ஜோதிடத்தில் புதன் கிரகத்தினை வைத்துதான் தாய்மாமன் நிலை அறிவார்கள் என்பதனை இங்கே கவனத்தில் வைத்துக் கொள்ளவும்.

## (17) திதிகள் பற்றி உண்மை.

தேதி என்பதன் மருவுதான் திதி என்று சொல்லப்படுகிறது. தேதி என்பது மேல்நாட்டு முறை. திதி என்பது நம்நாட்டு முறை.

சூரியன் என்ற கிரகத்தின் மின்சக்தி உடைய நாள் பிரதமை எனப்படும். எனவே சூரியன் முதல் கிரகமாக இருப்பதால் பிரதமை என்ற சொல் முதன்மையை குறிக்கிறது.

சந்திரன் என்ற கிரகத்தின் மின்சக்தி உடைய நாள் துதியை திதி எனப்படுமத் சந்திரன் சூரிய குடும்பத்தில் இரண்டாவது கிரகமாகும். இரண்டாவது என்பதற்கு சமஸ்கிருதத்தில் துதியை என்று பெயர்.

குரு என்ற கிரகத்தின் மின்சக்தியுடைய நாள் திருதியை திதி எனப்படும். திருதியை என்றால் சமஸ்கிருதத்தில் மூன்று என்று பொருள். மூன்று என்பது குரு என்ற கிரகத்தை குறிக்கும்.

ராகு என்ற கிரகத்தின் மின்சக்தியுடைய நாள் சதுர்த்தி திதி எனப்படும். சதுர்த்தி என்றால் சமஸ்கிருதத்தில் நான்கு என்பது பொருள். நான்கு என்பது ராகுவை குறிக்கும்.

புதன் என்ற கிரகத்தின் மின்சக்தியுடைய நாள் பஞ்சமி திதி எனப்படும். பஞ்சமி என்பது சமஸ்கிருதத்தில் ஐந்து ஆகும். ஐந்து என்பது புதனை குறிக்கும்.

சுக்கிரன் என்ற கிரகத்தின் மின்சக்தி அதிகம் உள்ள நாள் சஷ்டி திதி எனப்படும். சஷ்டி என்பது சமஸ்கிருதத்தில் ஆறு என பொருள்படும். ஆறு என்பது சுக்கிரனை குறிக்கும்.

கேது என்ற கிரகத்தின் மின்சக்தி அதிகம் உள்ள நாள். சப்தமி திதி எனப்படும். சப்தமி என்பது சமஸ்கிருதத்தில் ஏழு என பொருள்படும். ஏழு என்பது கேதுவைக் குறிக்கும்.

சனி என்ற கிரகத்தின் மின்சக்தி அதிகம் உள்ள நாள் அஷ்டமி திதி எனப்படும். அஷ்டமி என்பது எட்டு என பொருள்படும். எட்டு என்பது சனி கிரகத்தை குறிக்கும்.

செவ்வாய் என்ற கிரகத்தின் மின்சக்தி அதிகம் உள்ள நாள் நவமி திதியாகும். நவமி என்பது சமஸ்கிருதத்தில் ஒன்பது என பொருள்படும். ஒன்பது செவ்வாய் கிரகத்தை குறிக்கும்.

சூரியன் என்ற கிரகத்தின் மின்சக்தி பூமியில் 10 மடங்கு அதிகம் உடைய நாள் தசமி திதியாகும். தசமி என்பது சமஸ்கிருதத்தில் பத்து என பொருள்படும்.

சந்திரன் என்ற கிரகத்தின் மின்சக்தி பூமியில் 10 மடங்கு அதிகம் உடைய நாள் ஏகாதசி திதியாகும். ஏகாதசி என்பது சமஸ்கிருதத்தில் 11 என பொருள்படும்.

குரு என்ற கிரகத்தின் மின்சக்தி 10 மடங்கு பூமியை உடைய நாள் த்வாதசி திதி எனப்படும். த்வாதசி என்பது சமஸ்கிருதத்தில் 12 என பொருள்படும்.

ராகு என்ற கிரகத்தின் மின்சக்தி 10 மடங்கு பூமியில் உடைய நாள் திரயோதசி திதியாகும். திரயோதசி என்பது சமஸ்கிருதத்தில் 13 என்று பொருள்படும்.

புதன் என்ற கிரகத்தின் மின்சக்தி 10 மடங்கு பூமியை உடைய நாள் சதுர்த்தசி திதியாகும். சதுர்த்தசி என்பது சமஸ்கிருதத்தில் 14 என்று பொருள்படும்.

சுக்கிரன் என்ற கிரகத்தின் மின்சக்தி 10 மடங்கு பூமியில் அதிகம் உடைய நாள் வளர்பிறையில் பௌர்ணமி திதி என்றும், தேய்பிறையில் அமாவாசை திதி என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு தான் ஒவ்வொரு திதிகளும் கிரகங்களின் மின்காந்த அலைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் தான் சனி கிரகத்தின் மின்சக்தி உடைய அஷ்டமி எதற்கும் உகந்ததல்ல என்ற கருத்தும் வந்தது.

எந்தெந்த கிரகத்தின் மின்சக்தி என்னென்ன செய்யும் என்பதனை இந்த புத்தகத்தின் முன்பகுதியில் தெளிவாக கூறியுள்ளேன். அதை வைத்து திதிகளின் முக்கியத்துவத்தை தெரிந்து கொள்ளுங்கள்.

## (18) பல் விழுந்தால் பசுஞ்சாணத்தில் வைத்து ஓட்டின் மேல் வீசினால் மீண்டும் அவ்விடத்தில் பல் விரைவாக முளைக்கும் என்பது மூதாதையர் வாக்கு. காரணம்.

நம் உடம்பில் இயங்கும் மின்காந்த அலைகளுக்கும் நம்முடைய உடம்பிலிருந்து அகற்றப்பட்ட நகம், முடி போன்றவைகளுக்கும் மின்காந்த ரீதியான தொடர்பு உண்டு. அவ்வாறே நம் வாயிலிருந்து உதிர்ந்த பற்களுக்கும் நமக்கும் மின்காந்த ரீதியான தொடர்பு உண்டு. மேலும் அவ்வாறு உதிர்ந்த பற்களை பசுஞ்சாணத்தில் வைத்து ஓட்டின் மீது போடும்பொழுது சூரியனின் ஒளிக்கதிர் அதன் மீது படும்பொழுது பசுஞ்சாணத்தின் மின்காந்த அலைகள் நம் பற்கள் உதிர்ந்த இடத்தில் தாக்கம் செலுத்தி அவ்விடத்தில் நோய் ஏற்படாமலும் விரைந்து பற்கள் வளரவும் காரணமாகிறது. இதற்கான காரணம் என்ன வெனில் பசுஞ்சாணத்தில் நோய் தீர்க்கும் மூலங்கள் இருக்கிறது என்பதனை உலகிலுள்ள எல்லா மருத்துவ முறைகளும் ஒப்புக்கொள்கின்றன. இப்பசுஞ்சாணத்தில் அம்மோனியா (Ammonia) ஃபீனோல் இன்டோல் (Indol) ஃபார்மாலின் (Formalin) மற்றும் நன்மை பயக்கும் பாக்டீரியாக்கள் (Bacteria) முதலியவை உள்ளன.

இவை அனைத்தும் பற்கள் உதிர்ந்த இடத்தில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி நலம் புரிகிறது. இதனை உணர்ந்த மூதாதையர்கள் இத்தகைய வழிமுறைகளை கையாண்டது. இந்த சமூகத்திற்கு அவர்கள் செய்த நன்றிக்கடன்.

## (19) 卐 ஸ்வஸ்திக். இம்முத்திரை பற்றிய செய்தி.

இம்முத்திரை உள்ள இடங்களில் சூரியன் மற்றும் சந்திரன் போன்ற இடங்களில் மின்சக்தி குவிகிறது என நம் மூதாதையர்கள் கண்டறிந்தனர். இது எந்தளவிற்கு உண்மை என்பதற்கு ஒரு சான்று.

நம் தோட்டங்களில் இம்முத்திரை வடிவில் செடிகளை வரிசையாக நட்டால் அவைகளில் புழு, பூச்சி பிடிப்பதில்லை. அவைகள் பட்டும் போவதில்லை. இதற்கு காரணம் ஸ்வஸ்திக் வடிவில் செடிகள் நடும்பொழுது அவைகள் சூரியனின் ஒளி மின்சக்தியையும், சந்திரனின் நீர் மின்சக்தியையும் கிரகித்து நல்ல முறையில் வளர்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும். இனி உங்கள் அனுபவத்தில் இம்முத்திரையை பயன்படுத்தி பாருங்கள்.

## (20) கருப்பு நிறம் ஏன் ஆகாது? விளக்கம்.

சனி என்ற கிரகத்தின் மின்சக்தி கருப்பு நிற கதிர்களை உடையது. இது மிகவும் நுட்பமாக ஊடுருவி செல்வதால் நம் கண்களால் காண முடிவதில்லை. மேலும் இம்மின்சக்தி உடைய நாளில் பிறந்தவர்கள் பெரும்பாலும் துரதிர்ஷ்டம் உடையவர்கள். இம்மின்சக்தி சனிக்கிழமை தவிர மற்ற நாட்களில் உடலுக்கு சோர்வுகளையும், காரிய தடங்கல்களையும் ஏற்படுத்துகிறது. எனவே கருப்பு நிற ஆடைகளை அணியும்பொழுது இக்கிரகத்தினுடைய மின்சக்தி அந்த ஆடையின் நிறத்தில் ஊடுருவி சரீரத்தில் சோர்வையும் எண்ணங்களில் எதிர்மறை சிந்தனைகளையும் ஏற்படுத்துகிறது. மேலும் இந்த மின்சக்தியில் பிறந்த மனிதர்களின் தொடர்புகளை ஏற்படுத்தி அம்மனிதர்களால் துரதிர்ஷ்டமே ஏற்படுகிறது என்ற காரணத்தால் இந்த நிறம் தவிர்க்கக் கூடியதேயன்றி பயன்படுத்தக்கூடியது அல்ல.

இந்நிறம் இலட்சத்தில் ஒருவருக்கு நன்மையை செய்யும். ஆனால் அம்மனிதர்கள் எதிர்மறை சிந்தனை உடையவர்களாக தான் இருப்பார்கள்.

## (21) பில்லி, சூன்யம், ஏவல், காற்று, பிரம்ம ராட்சதம், பேய், பிசாசு இவை பற்றி சில விளக்கம்.

**பில்லி :** பில்லி என்றால் புள்ளி என்று பொருள். ஒரு மனிதனுடைய உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட நகம், முடி அவர்கள் பயன்படுத்திய ஆடை இவற்றின் மீது சில எதிர்மறை மின்சக்தியுடைய மூலிகையின் வேர்களை அரைத்து அதிலிருந்து பெறப்பட்ட மையினை மேற்படி நபர் பயன்படுத்திய நகம், முடி, துணி ஆகியவற்றின் மீது எதிர்மறை மின்சக்தியுடைய நாளில் புள்ளியாக வைத்தால் அந்நாளின் மின்சக்தியும் மேற்கண்ட மூலிகையில் இயங்கும் எதிர்மறை மின்சக்தியும் அது சம்பந்தப்பட்ட நபர்களின் மீது சரீரத்தில் பிராணன் வழியே கலந்து பல்வேறு இன்னல்களையும் அவஸ்தைகளையும் ஏற்படுத்துகிறது.

**பின்குறிப்பு :** சில நலன் கருதி எதிர்மறை மின்சக்தியுடைய மூலிகையின் பெயரை குறிப்பிடவில்லை.

**சூன்யம் :** சூன்யம் என்றால் வெற்றிடம் என்று பொருள். ஒருவரின் இடத்தைச் சுற்றிலும் அசுப விலங்கினங்களின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட பொருளை மேற்படி இடத்தில் புதைத்து விட்டால் துரதிர்ஷ்டமான மின்காந்த அலை அவ்வீட்டை சுற்றிலும் இயங்கி அவ்வீட்டில் உள்ளவர்களுக்கு பல்வேறு வகையான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

**ஏவல் :** ஏவல் என்பது நமக்கு முன் மிகவும் முரடனாகவும், துஷ்டனாகவும், வாழ்ந்தவனுடைய ஆவிகளை அழைத்து அவைகளை திருப்திபடுத்தி நமக்கு வேண்டாதவர் மீது ஏவி விட்டு பல்வேறு துன்பங்களை நிகழ்த்தும் செயலே ஏவல் எனப்படும். மேலும் இதில் துர்தேவதைகளையும் பயன்படுத்துகிறார்கள்.

**பின் குறிப்பு :** சில நலன் கருதி இதன் பின்னனி விஷயங்களை விரிவாக வெளியிட வில்லை. மேலும் இத்தகைய பாதிப்பு உள்ளவர்கள் என்னை நேரில் சந்தித்து இதிலிருந்து மிகச் சுலபமாக விடுபடுங்கள். இதற்கான போலியான மாந்ரீகர்களை சந்தித்து பொருள் விரையம் செய்யாதீர்கள்.

**காற்று, கருப்பு :** கருவில் இறந்த குழந்தைகளில் உடலில் இயங்கிய மின்காந்த அலை காற்றில் மிதந்து கொண்டிருக்கும். அது போன்ற இடங்களுக்கு குழந்தையுடன் செல்லும் பொழுது அவ்வாறு காற்றில் மிதக்கும் மின்காந்த அலை குழந்தையின் உடம்பில் சுவாசத்தின் வழியே உள்ளே சென்று விடுகிறது, அதற்கு பிறகு அக்குழந்தையின் கண்கள் மற்றும் உடம்பு உச்சி முதலியவை லேசான காய்ச்சல் போன்ற உஷ்ணத்தால் பாதிக்கப்படும். மேலும் அக்குழந்தையின் மலம் மிகவும் துர்வாடையுடையதாகவும் பச்சை நிறம் கலந்த பிசின்போல் இருக்கும். வயிற்றுபோக்கு தொடர்ந்து ஏற்படும். இது மருந்து மாத்திரைகளுக்கு கட்டுப்படாது. இதையே காற்று, கருப்பு என நாம் கூறுகிறோம்.

**பிரம்மராட்சஷம் :** இறந்து போன, திருமணமாகாத பிராமணரின் ஆவியை பிரம்மராசஷம் என்று அழைக்கிறோம். இப்படிப்பட்ட ஆவிகள் தாம் வாழ்ந்த காலத்தில் எதை எதை அடைய ஆசைபட்டனவோ அவைகளை வேறொருவரின் சுவாசத்தின் வழியே உடலில் கலந்து அவற்றை அடைய முற்படும். அச்சமயத்தில் இதனால் பாதிக்கப்பட்ட மனிதர்களின் உடம்பிலும் எண்ணங்களிலும் விந்தையான வினோதமான மாற்றங்கள் தொன்படும்.

**பேய், பிசாசு :** மிகவும் துஷ்டனாக வாழந்தவனுடைய உடம்பில் இயங்கும் ஆன்மா அவ்வுடல் மரித்ததும் வேறொரு துஷ்டனுடைய சுவாசத்தின் வழியே அவனுடைய உடலுக்குள் சென்று பல்வேறு இச்சைகளை பூர்த்தி செய்து கொள்ளும் இத்தகையவர்களை நாம் இன்றும் ஏர்வாடி போன்ற இடங்களில் காணலாம்.

## (22) சகுணம் பற்றிய சில விளக்கம்.

நாம் திருமணம் சம்மந்தமாக ஒரு பெண்ணை பார்க்க செல்லும்பொழுது எதிரில் திருமணம் ஆகி பலகாலம் புத்ரபாக்யம் இல்லாத பெண் வந்தால் அதனை துரதிருஷ்டம் என நம் சகுணசாஸ்திரம் சொல்கிறது. ஏனெனில் பெண் பார்க்க புறப்படுகையில் குழந்தை பாக்யம் இல்லாத பெண் எதிரில் வந்தால் நாம் போய் பார்க்க வேண்டிய பெண்ணின் உடம்பும் இத்தகைய தன்மைகளையுடையது என்பதுதான் அது. இது இயற்கை அனுபவ உண்மை.

இவ்வாறே அனைத்து சகுணத்தின் பின்னனியிலும் நம் எதிரில் வருபவர்களின்

தன்மையைப் பொறுத்தே நாம் சேருமிடத்தின் தன்மையும் இருக்கும் என்பது இயற்கைமொழி. இதை வாழ்க்கையில் பின்பற்றி பார்த்து விட்டு பிறகு சொல்லுங்கள்.

## (23) கோவிலில் தேங்காய் உடைப்பது பற்றிய அதிசய உண்மைகள் :

தேங்காய் வருடம் முழுவதும் விளையக்கூடியது. தென்னை பூ பூத்த நாளிலிருந்து தேங்காயாக விளைந்து அது உதிரும் நாள்வரை பத்து மாதம் ஆகிறது. எனவே பத்து மாதத்தின் தன்மையான அனைத்து பருவகாலங்களையும் உள்ளடக்கியது. மேலும் நிலம், நீர், ஒளி, காற்று, விண் ஆகிய பஞ்ச பூதத் தன்மைகளை தன்னுள்ளே கொண்டுள்ளது. இதனை கோவில் வாசலில் உடைக்கும்பொழுது அவ்விடத்தில் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்சபூத தன்மைகளை குவிக்கிறது. எனவே மேற்படி இடங்களுக்கு வரும் மனிதர்களின் உடம்பில் இயங்கும் பஞ்சபூத ஆற்றலை செம்மைப்படுத்துகிறது.

இதனால்தான் நம் மூதாதையர்களின் ரோகவில்களில் அதி நுட்பமான சில உண்மைகளை நமக்காக விட்டு சென்றுள்ளனர்.

## (24) மருதாணி மரம் பற்றிய சில அமானுஷ்யமான உண்மைகள் :

இம்மரத்தில் சனி மற்றும் செவ்வாய் கிரகத்தின் மின்சக்தி குவிந்துள்ளது. செவ்வாய் கிரகத்தின் மின்சக்தி சிவப்பு நிற ஒளிக்கதிர்களை உடைப்பது. எனவே இம்மரத்தின் இலைகளை அரைத்து பூசினால் கையில் சிவப்பு நிறம் ஏற்படுகிறது. மேலும் இம்மரத்தின் சனி கிரகத்தின் மின்சக்தியும் உள்ளதால் இவற்றினை (மருதாணி) கையில் வைக்கும் பெண்களின் நகக்கண் வழியே இம்மரத்தின் மின்சக்தி உடலில் ஊடுருவி பேய், பிசாசு போன்ற பூதகணங்களின் பாதிப்பிலிருந்து பெண்களை பாதுகாக்கிறது. மேலும் வீட்டில் மாந்திரீக பாதிப்புள்ளவர்கள் மருதாணி விதையைய்யும், வெண்கடுகுவையும் சாம்புராணியில் தூபதீபம் போடும் பழக்கமும் இதனால் வந்தது. இம்மரத்தில் இயங்கும் மின்சக்தியை மனித உடலில் செலத்தி அதன்மூலம் எத்தகைய பாதுகாப்புகளை நமக்கு நம் மூதாதையர்கள் அமைத்துக் கொடுத்துள்ளார்கள் என்பது மிகவும் வியப்புக்குரியது.

ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் இன்றும் பேய், பிசாசு பாதிப்பு உள்ளவர்களுக்கு மருதாணியை அரைத்து உடலில் பூசி குளிக்கச் செய்து இவற்றினை விரட்டுகிறார்கள்.

## (25) மனுதர்மம் பற்றிய வியப்பான உண்மை :

மனு என்பவன் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதன். இம்மனிதன் எழுதிய சாஸ்திரமே மனுதர்மம் எனப்பட்டது.

மனு வாழ்ந்த காலத்தில் வேளாளர், வைசியர், சத்ரியர், துளுவர், சங்கமர்கள் என்ற ஐந்து இன மக்கள் மட்டுமே வாழ்ந்து வந்தனர். இவர்கள் அவர்களின் பாரம்பரிய தொழில்களான விவசாயம், கோவில், கைத்தறி, வியாபாரம், காவல், துப்புரவு பணி இவற்றினை செய்து வந்தனர். ஆனால் இன்று எப்படி இத்தனை ஜாதிகள் எற்பட்டன என்பதற்கான விளக்கம்:-

அவ்வாறு வாழ்ந்து வந்த இந்த இனத்தவர்களில் பிராமண குலத்தில் பிறந்த பெண்ணும், வைசிய குலத்தில் பிறந்த ஆணுக்கும் காதல் ஏற்பட்டு திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு பிறந்த குழந்தை பிராமண வம்சத்தின் மின்காந்த அமைப்பையும், வைசிய வம்சத்தின் மின்காந்த அமைப்பையும் பெற்றுதான் வளர்ந்து ஆளான காலத்தில் இவர்களெல்லாம் ஒரு ஜாதியினராக பிரிந்தனர். இவ்வாறே பல பிரிவுகளில் பிறந்த ஆணும், பெண்ணும் காதல் மணம் செய்து கொண்டு பிறந்த குழந்தைகள் அதற்கேற்ற சூழ்நிலைக்கு தக்கவாறு ஒரு ஜாதியினராக பிரிந்து பிரிந்து இன்று இத்தனை ஜாதியினர் உருவாகி விட்டனர். நாம் இன்றும் நம் ஊரில் உள்ள பல்வேறு இனத்தை சார்ந்த நபர்களை ஒன்றாக நிறுத்தி இவர்களை முன்பின் பார்க்காத ஒருவரை கேட்டால் மேற்படி நபரில் யார் எந்தெந்த இனத்தை சார்ந்திருக்கக்கூடும் என கூறிவிட முடியும். ஏனெனில் அவர்களின் மூதாதையர் உடலில் இயங்கும் மின்காந்த அமைப்பையே சரீரமாக பெற்று இருப்பதால் இது சாத்தியமாகிறது. இந்த இன முறை எல்லா நாடுகளிலும் வேறு பெயர்களில் இன்றளவும் உண்டு என்பதனை பல்வேறு தேசங்களைப் பற்றிய வரலாறு அறிந்தவர்கள் அறிவார்கள்.

## (26) தர்ப்பணம் கொடுப்பதன் பின்னனியில் உள்ள உண்மைகள் :

நான் முன்னமே திதிகளைப் பற்றி கூறியிருக்கிறேன். ஒருவர் எந்த கிரகத்தின் மின்சக்தியுடைய நாளில் இறந்தார்களோ அதே மின்சக்தியுடைய நாளில் நாம் அவர்களுடன் தொடர்பு கொள்ள வகுக்கப்பட்ட முறைகளே தர்ப்பணம் ஆகும்.

பிரதமை திதியில் (அதாவது சூரியனின் மின்சக்தியுடைய நாள்) இறந்தவர்கள் இதே மின் சக்தியை உடைய திதி வரும் நாளில் தர்ப்பணம் கொடுக்கும்பொழுது அது அம்மின்சக்தியில் பிறந்தவர்களுக்கு ஸ்வதா தேவதை அத்தகைய தர்ப்பணத்தை அம்மின்சக்தியில் இறந்தவர்களுக்கு கொண்டு சேர்க்கிறது. அவர்கள் எவ்வித பிறவி எடுத்திருந்தாலும் அதற்கேற்றபடி அவர்களிடம் கொண்டு சேர்க்கிறது.

இதன் மூலம் தம் மூதாதையர்களுக்கு நாம் செய்யும் தர்ப்பணம் அவர்களுக்கு சென்று சேரும் அதே நேரம் யாரிடமிருந்து இத்தகைய தர்ப்பணம் தரப்படுகிறதோ அவரும் பல்வேறு ஆசிகளை மூதாதையரிடமிருந்து பல்வேறு வகைகளில் பெற்று வாழ்க்கையில் சிறப் படைகிறார்கள் என்பது இன்றளவும் உண்மை.

இறந்தவர்களின் திதி தெரியாதவர்கள் புரட்டாசி மாதம் ஆடி அமாவாசையில் இத்தகைய தர்ப்பணம் செய்து நிறைவடையலாம்.

## (27) நீருக்கும் செல்வச்செழிப்பிற்கும் உள்ள தொடர்பு :

நம் கிராமப் புறங்களில் மக்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டால் அவர்கள் கோவிலில் சென்று இனி இந்த குடும்பத்தாருடன் உள்ள தொடர்பையும் இனி அவர்கள் வீட்டில் நீர் புழங்கவும் மாட்டேன் என சத்தியம் செய்துகொள்வார்கள். இது நாம் அனைவரும் அறிந்ததே. அவ்வாறே ஆகாதவன் வீட்டில் நீர் புழங்கக்கூடாது என்ற சொல்வழக்கு வந்தன.

இதன் பின்னனியில் உள்ள காரணம் என்னவெனில் ஒரு வீட்டில் வசிக்கும் மனிதர்கள் உடம்பில் இயங்கும் கிரகங்களின் மின்காந்த அலைகள் அவ்வீட்டில் உள்ள நீரிலும் பதிவாகி இருக்கும் அந்நீரை குடிக்கும் மனிதர்கள் உடம்பிலும் இம்மின்சக்தி பரவி விடும் என நம் மூதாதையர்கள் அறிந்து வைத்திருந்தனர்.

துஷ்டர்கள் வசிக்கும் வீட்டிலும் கெட்ட பழக்கவழக்கங்கள் உள்ளவர்கள் வீட்டிலும் வாஸ்து தோஷம் உள்ள வீட்டிலும் நீர் வாங்கி பருகினால் மேற்படி நபர் மற்றும் இடத்தின் மின்சக்தி நம் உடம்பில் இயங்கி அவர்களைப் போல வாழும் சூழ்நிலையை ஏற்படுத்திவிடும்.

வாஸ்து நல்லமுறையில் அமைந்த வீடுகளிலும், சான்றோர்கள், மகான்கள், நேர்மையான வழியில் சம்பாதித்த செல்வந்தர்கள் வீட்டிலும் நீர் வாங்கி பருகினால் அவ்விடம் மற்றும் நபர் ஆகியவற்றில் இயங்கும் கிரக மின்சக்தி நம் உடம்பு கிரகித்து அது உடம்பில் திசுவாக பதிவாகி இதே மின்சக்தியை மேலும் மேலும் பெருக்கிக்கொண்டு நல்ல சீரும் சிறப்புமான வாழ்க்கை வாழ வழிசெய்யும் என்பது அனுபவ உண்மை. அவ்வகையில் கோவில் தீர்த்தமும் இத்துடன் சேர்ந்ததே.

## (28) கண்திருஷ்டி எவ்வாறு ஏற்படுகிறது?

நம்மிடம் உள்ள ஒரு பொருளை அப்பொருள் இல்லாத ஒருவன் ஆதங்கத்துடன் பார்க்கும்பொழுதும் மற்றும் நம்மிடம் உள்ள சிறப்பை அச்சிறப்பு இல்லாத ஒருவன் பார்க்கும்பொழுது அம்மனிதனின் உடம்பில் இயங்கும் அத்தகைய எண்ணங்களின் தாக்கம் நம்மீதும், நம் பொருள்மீதும் குவிவதால் அவ்விடத்தில் எதிர்மறை மின்சக்தி செயல்பட்டு நாமும், நம்பொருளும் பாதிப்படைய அது காரணமாகிறது.

உதாரணமாக நன்றாக சாப்பிடும் குழந்தையை நன்றாக சாப்பிடாத குழந்தையைப் பெற்றவர் ஆதங்கத்துடன் பார்க்கும்பொழுது அத்தகைய எண்ணத்தாக்கம் சாப்பிடும் குழந்தையின் மீது குவிந்து அவ்விடத்தில் எதிர்மறை மின்சக்தி உருவாகி அக்குழந்தையும் சாப்பிட மறுக்கும் நிலை ஏற்படுகிறது. இத்தகைய எண்ணத்தாக்கம் அதிகம் உடையவர்களையே நாம் பாம்புக்கண், கொல்லிகண் என்று நம்மவர்கள் வசைபாடுகிறார்கள்.

நீங்கள் புது வண்டியை வாங்கினால் அப்புதுவண்டியை உங்கள் நண்பரிடம் காட்டும்பொழுது அத்தகைய வண்டி வாங்கும் சூழ்நிலையில்லாத உங்களின் நண்பர் ஏக்கமாக உங்களையும் உங்கள் வண்டியையும் பார்த்தால் உங்கள் மீதும் உங்கள் வண்டி மீதும் உங்கள் நண்பரின் எண்ண அலைகள் குவிந்து உங்களுக்கும் உங்கள் வண்டிக்கும் பல்வேறு இடையூறு ஏற்படுதை உங்கள் அனுபவத்தில் காணலாம்.

உங்கள் அன்றாட வாழ்க்கையில் இந்த விஷயத்தினை எல்லா வகையிலும் கூர்ந்து கவனியுங்கள்.

**பின்குறிப்பு :** நீங்கள் ஒரு பொருளை வாங்குவதற்கு முன் யாரிடமாவது அப்பொருள் இல்லாத நபரிடம் சொன்னால் அது அந்த நபரின் எண்ண அலைகளை உங்கள் எண்ண அலைகளின் மீது எதிர்மறையாக பதிந்து வண்டி வாங்க முடியாமல் போய்விடும். இதுபற்றி சற்று விழிப்புணர்வுடன் இருங்கள்.

## (29) களத்திரதோஷம் உடையவர்கள் ஏன் வாழை மரத்திற்கு தாலி கட்டி சடங்கு செய்கிறார்கள்? விளக்கம்.

திருமணம் ஆகாத கன்னிப்பெண்கள் திடீரென இறந்துவிட்டால் அத்தகையவர்களின் உடம்பில் இயங்கிய மின்சக்தி (ஆன்மா) மீண்டும் வாழை மரமாக பூமியில் வளர்ந்து பூ பூத்து காய்ந்து கனிந்து தன் கனிகளையும், பூ மற்றும் இலை, தண்டு ஆகிய அனைத்தையும் தருகிறது. இச்செயல் ஏறக்குறைய பெண்கள் பூப்யெதி திருமணம் முடித்து தாயாகி தன் குழந்தைக்கு பாலூட்டி வளர்த்து ஆளாக்கும் நிலைக்கு ஒப்பாகிறது.

நம் மூதாதையர்கள் கன்னிப்பெண்களின் ஆன்மா மீண்டும் வாழையாக பிறந்பெடுத்ததை அறிந்தனாலேயே இச்சடங்கு முறையினை இருதார யோகம் உள்ளவர்களுக்கு செய்கிறார்கள்.

வாழை மரத்திற்கு தாலிகட்டுதல் என்பது ஒரு பெண்ணிற்கு தாலிகட்டுவதற்கு சமம். வாழை மரத்தை வெட்டுவது மனைவி இறந்ததற்கு சமம். பிறகு வேறு பெண்ணை திருமணம் செய்துகொண்டால் அப்பெண் இந்த தோஷத்தினால் பாதிக்கப்படுவதில்லை என்பது மிகப்பெரிய அனுபவ உண்மை.

## (30) அரச மரத்தை சுற்றினால் குழந்தை பாக்யம் கிடைக்கும் என்பது மூதாதையர் வாக்கு. விளக்கம்.

குரு, சுக்கிரன இவ்விவரு கிரகத்தின் மின்சக்தி அரச மரத்தில் உள்ளது. மேலும் மனித சரீரத்தில் விந்து சக்தி உருவாக சுக்கிரனின் மின்சக்தியும், அதில் உயிர்சக்தி உருவாக குருவின் மின்சக்தியும் அவசியம் வேண்டும்.

ஜாதக ரீதியாக இம்மின்சக்தி தரும் கிரகங்கள் சரியான டிகிரியில் இல்லாவிட்டால் இக்குறைபாடு ஏற்படும். எனவே இம்மின்சக்தி அதிகம் குவிந்துள்ள அரச மரததின் கீழ் செல்லும்பொழுது அம்மரத்தில் இயங்கும் இவ்விரு கிரகத்தின் மின்சக்தி அதன் கீழ் உள்ள நபரின் சுவாசத்தின் வழியே இரத்தத்தில் கலந்து உயிர்சக்தியும், விந்து சக்தியும் ஏற்படுவதற்கு காரணமாக உள்ள உடம்பின் நாளமில்லா சுரப்பிகளை செயல்பட தூண்டுகிறது. எனவேதான் இதுபற்றி அறிந்த நம் மூதாதையர்கள் அரச மரத்தின் கீழ் விநாயகரை ஸ்தாபித்து வலம் வரும் பழக்கத்தினை ஏற்படுத்தினார்கள்.

இம்மரத்தை சுற்றும்பொழுது இம்மரத்தில் இயங்கிவரும் மின்சக்தி விந்து சக்தியின் நீர்ப்பு தன்மையை விரைவில் சரிசெய்கிறது. எத்தனையோ இலட்சக்கணக்கான பேர்களுக்கு இவ்வதிசயம் நடந்துள்ளது.

மேலும் ராகு, கேது போன்ற கிரகத்தினால் உயிர்சக்தியில் ஏற்படும் நச்சுத்தன்மையையும் அரச மரத்தில் இயங்கும் மின்சக்தி கட்டுப்படுத்துகிறது.

## (31) செவ்வாய், வெள்ளி, சனி போன்ற கிழமைகளில் மாமிசம் உண்ணக்கூடாது அப்படி சாப்பிட்டால் பிணி, வறுமை ஏற்படும் என்பது ஐதீகம். விளக்கம்.

சூரியனின் மின்சக்தியை அதிகம் கொண்ட நாள் ஞாயிறு. இம்மின்சக்தியுடைய நாளில் எது சாப்பிட்டாலும் சுலபமாக செரிமானம் ஆகிவிடும். ஏனெனில் சூரியனின் மின்சக்தி மிகவும் ஆக்க சக்தியை உடையதுதான் காரணம்.

சந்திரனின் நீர்மின்சக்தியை உடைய நாள்தான் திங்கள்கிழமை. இந்த நாட்களில் நீர் மின்சக்தி உடைய உணவுகளான தர்பூசணி, சுரக்காய், புடலங்காய், வெண்பூசணி போன்ற காய்கறிகளை சாப்பிட உகந்த நாள். இந்நாளில் நெருப்பு உணவான மாமிசம் மற்றும் உஷ்ண உணவுகள் உட்கொண்டால் அன்றைய தினம் உடலில் இயங்கும் நீர்மின்சக்தியில் தடையேற்பட்டு நீர் சம்பந்தப்பட்ட உபத்திரவமும் இம்மின்சக்தியில் பிறந்த மனிதர்களின் தொடர்பு ஏதாவது ஒருவகையில் பாதிக்கும் என்பது உறுதி.

செவ்வாய் கிரகத்தின் நெருப்பு, உஷ்ண மின்சக்தி உடைய நாள்தான் செவ்வாய்கிழமை. எனவேதான் செவ்வாயை ஜோதிடத்தில் சண்டைக்கு காரணமான கிரகம் என்று கூறப்படுகிறது. ஏனெனில் இக்கிரகத்தின் உஷ்ண மின்சக்தி மனித உடலில் சுவாசத்தின் வழியே இரத்தத்தில் கலந்து சரீரத்தில் உஷ்ணத்தை ஏற்படுத்தி அதன்மூலம் மனஅழுத்தம் ஏற்பட்டு அவ்வுணர்வு கோப உணர்வாக உருபெற்று சண்டையாக வெடிக்கிறது.

இம்மின்சக்தி உடைய நாளில் நீர்மின்சக்தியுடைய உணவை எடுத்து கொண்டால் அது உடம்பின் உஷ்ண மின்சக்திக்கு எதிர்மறை சக்தியாக செயல்பட்டு அம்மின்சக்தி உடைய நபர்களின் தொடர்புகளையும் பாதித்து பல்வேறு துன்பங்களை ஏற்படுத்துகிறது.

புதன் கிரகத்தின் மின்சக்தி உடைய நாள் புதன்கிழமையாகும். இந்நாளில் எந்த உணவும் சாப்பிட்டாலும் சரீரமும் இம்மின்சக்தி உடையவர்களின் தொடர்பும் எவ்வகையிலும் பாதிக்காது.

குருகிரகத்தின் மின்சக்தி உடைய நாள் வியாழக்கிழமையாகும். இந்நாளில் புளிப்பு உணவுகளுக்கு ஏற்றது. மேலும் மஞ்சள் நிற கனிகள் சிறந்தது. மற்றவை ஆகாது. எலுமிச்சை, ஆரஞ்சு போன்றவை சிறப்பு.

சுக்கிரகிரகத்தின் மின்சக்தியுடைய நாள் வெள்ளிகிழமையாகும். இம்மின்சக்தி உடலில் விந்து சக்தியினை உற்பத்தி செய்கிறது. எனவே இந்நாளில் பாதாம், பிஸ்தா, முந்திரி போன்ற கொட்டை பருப்புகள் சாப்பிட்டால் உடனடி பலன் தெரியும். மற்ற நாட்களில் இப்பருப்புகளை சாப்பிடுவது வீண்.

இந்நாளில் மாமிசம் போன்ற உணவுகள் சாப்பிட்டால் சரீரத்தில் உஷ்ண மிகுதி ஏற்பட்டு விந்து சக்தியின் உற்பத்தி உடலில் பாதிக்கப்படும் மேலும் இம்மின்சக்தி தடையால் இந்நாளில் பிறந்தவர்களின் தொடர்பும் பாதிக்கப்படும்.

சனிகிரகத்தின் மின்சக்தியுடைய நாள் சனிகிழமையாகும். இம்மின்சக்தியுடைய நாளில் சரீரம் குளிர்ச்சி அடைய தேவையான எண்ணெய் குளியல், உஷ்ணத்தை தணிக்கும் உணவுகளை இந்நாளில் சாப்பிட்டால் உடனடி பலன் தெரியும். இந்நாளில் ஒரே ஒருமுறை எண்ணெய் குளியல் செய்துவிட்டால் வாரம் முழுவதும் சரீரம் உஷ்ணத்தால் பாதிக்கப்படாது என்பது அனுபவ உண்மையாகும். மற்ற நாளில் எண்ணெய் தேய்த்து குளித்தார் உடம்பின் மின்காந்த தன்மையில் எதிர்மின்சக்தி உண்டாகி அது பலவகையில் சரீரத்தையும் அம்மின்சக்தி உடைய மனித தொடர்புகளையும் பாதிக்கும்.

எனவே இந்நாளில் மாமிசம் சாப்பிடுவது கூடாது. இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற்பட்டு இந்நாளில் உடலில் ஏற்படும் இரசாயன மாற்றங்கள் கடுமையாக பாதிப்பதுடன் இம்மின்சக்தியின் தொடர்பு கொண்ட மனிதர்கள் உறவும் பாதிக்கப்படுகிறது.

எனவே மாமிச உணவிற்கு ஞாயிறு, புதன் ஏற்ற கிழமைகள் மற்ற நாள் ஏன் ஆகாது என இனி உங்களுக்குத் தெரியும்.

## (32) நவ தானியங்கள் பற்றிய விந்தையான சில உண்மைகள் :

ஒவ்வொரு தானியங்களிலும் ஒவ்வொரு கிரகத்தின் மின்காந்தலைகள் உள்ளது. இதன் பின்னனியில்தான் ஹோமங்களில் கலசங்கள் வைக்கப்படும்பொழுது ஒவ்வொரு கலசத்திற்கும் கீழ்க்கண்டவாறு கலர் துணியினையும் தானியங்களையும் கலசத்தின் அடியில் பரப்புகிறார்கள்.

செம்பு கலசம் - இதில் ஒன்பது கலசம் ஒன்பது கிரகங்களுக்கும் வைக்கப்படுகிறது. செம்பு என்ற உலோகம் ஒன்பது கிரகங்களையும் இயக்கும் மின்சக்தியை ஈர்க்கும் தன்மையுடையது.

இதில் சூரியனின் மின்சக்தியுடைய கோதுமையை பரப்பி அதன்மேல் செம்பு கலசம் வைத்து அதற்கு இக்கிரக மின்சக்தியை ஆகர்ஷணம் செய்யும் நிறமான சிவப்பு நிறத்தினை கலசத்தின்மேல் சுற்றிவிடுவார்கள். இவ்வாறு சூரியனுக்கு கலசம் வைக்கப்படுகிறது.

புதன் மின்சக்தியுடைய பச்சைப் பயறு மேல் கலசம் வைத்து பச்சைநிற பட்டு துணியை இக்கலசத்தின் மேல் சுற்றி புதன் கிரகத்திற்கான கலசம் வைக்கப்படுகிறது.

சந்திரனின் கலசத்தை நெல் மீது வெள்ளை நிற துணியை வைத்து கலசத்தில் சுற்றி இம்மின்சக்தி ஆகர்ஷணம் செய்யப்படுகிறது.

குருவின் கலசத்தை கடலை தானியம் மீது வைத்து இதற்கு மஞ்சள் துணிகட்டி இம்மின்சக்தியை கலசத்திற்கு கொண்டு வருகிறார்கள்.

சுக்கிரனின் கலசத்தை மொச்சை மீது வைத்து வெண்பட்டு துணியை சுற்றி இக்கிரகமின்சக்தி கிரகிக்கப்படுகிறது.

சனியின் கலசத்தை எள் மீது வைத்து கருப்பு பட்டு சுற்றி இம்மின்சக்தி கிரகிக்கப்படுகிறது.

செவ்வாயின் கலசத்தை துவரையின் மீது வைத்து சிவப்பு பட்டு சுற்றி இம்மின்சக்தி கிரகிக்கப்படுகிறது.

ராகு மின்சக்தியை உளுந்து மீது கலசம் வைத்து கருப்பு வஸ்திரம் சுற்றி கிரகிக்கப்படுகிறது.

கேது கலசத்தை மின்சக்தியை கொள்ளு மீது வைத்து பலவர்ண வஸ்திரம் கட்டி இம்மின்சக்தி கிரகிக்கப்படுகிறது.

இவ்வாறு ஒன்பது கிரகங்கிளன் மின்காந்த அலைகளை இக்கிரகங்களின் மின்சக்தியை ஈர்க்கும் தானியம் மற்றும் நிறங்கள் பயன்படுத்தப்பட்டு இம்மின்சக்தியை கலசத்தில் உள்ள நீரில் பெற்று அதனை தீர்த்தமாக தம்மை குடிக்க செய்தும் வீட்டில் தெளித்தும் இக்கிரகங்களின் மின்சக்தியை வீட்டில் பரவ வழி செய்தார்கள்.

## (33) வாஸ்து சாஸ்திரம் பற்றிய சில விளக்கம் :

நாம் வசிக்கும் பூமிக்கு எட்டு திசைகளில் இருந்து எட்டு விதமான மின்காந்த அலைகள் வருகிறது. இவ்வலைகள் பல்வேறு தன்மையுடையதாகவும் அதனால் பல்வேறு தாக்கங்களை மனித உடம்பில் ஏற்படுத்துகிறது என நம் மூதாதையர்கள் கண்டுபிடித்தனர்.

நாம் பூமியின் மீது வீடுகள் கட்டும்பொழுது இந்த எட்டு விதமான மின்காந்த அலைகளும் தடைபடாமல் வீட்டை அமைக்க வேண்டும். இல்லையெனில் அத்தகைய மின்காந்த அலைகளில் தடையேற்பட்டு அம்மின்காந்த அலைகள் அவ்வீட்டில் வசிக்கும் மனி தனுக்கு சென்று சேராமல் தடையேற்படுகிறது. அதனால் அம்மின்சக்தியின் பணி உடலிலும் அது தொடர்புடைய இடங்களிலும் பல்வேறு வகையான எதிர்மறை தாக்கங்களை ஏற்படுத்தி மனித வாழ்வைப் பாதிக்கிறது.

உதாரணமாக வீட்டின் வடகிழக்கு (ஈசான்யம்) பகுதியின் நீர்மின்சக்தியை ஒரு வீட்டின் அமைப்பு தடுக்குமானால் அது வீட்டில் இருக்கும் மனித உடம்பில் நீர்மின்சக்தியில் பாதிப்பை ஏற்படுத்தி நீரிழிவு, சலி, ஆஸ்த்துமா போன்ற தொல்லைகளையும் ஏற்படுத்துகிறது.

அதுபோலவே இம்மின்சக்தியில் பிறந்தவர்களின் தொடர்பினையும் பாதிக்கிறது என்பது அனுபவ உணமை.

பொதுவாக வீட்டின் அமைப்பு பூமியில் செயல்படும் எட்டுவித மின்சக்தியையு தடுக்காத வகையில் இருக்க வேண்டும் அப்பொழுதுதான் உடலின் எட்டுவிதமா இயக்கங்களும், அனைத்து கிரக மின்சக்தியில் பிறந்த மனிதர்களின் தொடர்பும் என்று பாதிக்கப்படாமல் நன்மை பயக்கும். இது அனுபவ உண்மை.

தீராத நோய்யென்பது வாஸ்துவின் குற்றமேஅன்றி உடலின் குற்றமல்ல என்பதை இனிமேலாவது வாழ்வில் அனுபவத்தில் உணருங்கள்.

## (34) வேங்கை மரம் பற்றிய சில உண்மைகள் :

செவ்வாய் கிரகத்தின் மின்சக்தியை பூரணமாக உடைய மரம். இம்மரத்தை வெட்டினால் சிவப்பு நிறத்தில் பால் வடியும். ஏனெனில் செவ்வாயின் மின்சக்தி சிவப்புநிற கதிர்களையுடையது.

நம் தமிழ்கடவுள் முருகன் இம்மரத்தில் இருப்பதாக வேதங்கள் சொல்லுகின்றன.

இம்மரத்தின் பாலை நெற்றியில் வைத்து கொள்ள பேய், பிசாசு, பில்லி, சூன்யம், ஏவல் இவைகள் கிட்டே நெருங்காது. 9, 18, 27 தேதியில் பிறந்தவர்களும் விருச்சிகம், மேஷம் முதலிய ராசியில் பிறந்தவர்களும் இம்மரத்தின் பாலினை நெற்றியில் வைத்துக்கொண்டால் இக்கிரக மின்சக்தி உடலில் பரவி இம்மின்சக்தி உடைய மனித தொடர்புகளையும் உயர்வுகளையும் ஏற்படுத்தும்.

காற்று, கருப்பு முதலியவற்றால் பாதித்த குழந்தைக்கு இப்பாலினை தெற்கு திசை நோக்கி நெற்றியில் இட்டவுடன் மேற்கண்டவைகள் விலகும்.

மாதவிலக்கு உடைய பெண்கள் இப்பாலின் அருகில் கூட போகக்கூடாது. மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் இம்மரத்தின் பால் நெற்றியில் வைக்கும்பொழுது அவ்விடத்தில் உள்ள ஆக்கினை சக்கரம் இப்பாலின் மூலம் செவ்வாய் கிரகத்தின் மின்சக்தியை உடம்பின் சூட்சும சரீரங்களுக்குள் ஈர்த்து பல்வேறு விதமான நூதன எண்ணங்களையும், யோசனைகளையும் ஏற்படுத்தும். மிகவும் உயர்வானது வேங்கைமரப்பால்.

## (35) நல்ல கிரகத்தின் திசை, தீய கிரகத்தின் திசை - இதுபற்றிய விழிப்புணர்வூட்டும் உண்மை.

ஒவ்வொரு கிரகங்களின் மின்காந்த அலைகள் மனித உடம்பில் எவ்வளவு காலம் செயல்படும் என்பதே திசை ஆகும்.

உதாரணமாக சூரியனின் திசை ஒருவருக்கு 6 ஆண்டுகள் நடப்பதாக வைத்துக் கொள்வோம். இத்திசையில் குறிப்பிட்ட மனிதருக்கு இக்கிரகத்தின் மின்சக்தி சிவப்பு நிறத்தையுடைய கதிர்களின் மூலம் அம்மனிதனின் உடம்பில் ஊடுருவி இதே மின்சக்தியில் பிறந்த மனிதர்களின் தொடர்புகளை ஏற்படுத்தி அதன்மூலம் நன்மை தீமைகளை ஏற்படுத்துகிறது.

இக்கிரகத்தின் மின்சக்தி அந்த உடம்பில் இருந்து நகர்ந்ததும் அடுத்து வெண்மைநிற ஒளிக்கதிர்களையுடைய சந்திரனின் நீர்மின்சக்தி அம்மனித உடம்பில் ஊடுருவி இதே மின்சக்தியில் பிறந்த மனிதர்களின் தொடர்பை ஏற்படுத்துகிறது.

இதனால்தான் யோகமான திசைவரும் காலத்தில் எல்லா வகையிலும் உதவி செய்யக்கூடிய நண்பர்களும் சூழ்நிலைகளும் தீய கிரகத்தின் திசையில் கெடுதல் தரும் சூழ்நிலையும் நண்பர்களும் ஏற்படுகிறார்கள்.

திசைமாறுதல் என்றால் உடம்பில் இயங்கும் கிரக மின்காந்த அலைகள் மாறுகிறது

என்று பொருள். அவ்வாறு மாறும்பொழுது எண்ணமும் சூழ்நிலையும் மாறுகிறது என்பது இன்றளவும் உள்ள அனுபவ உண்மை.

## (36) காதல், காமம், உடலுறவு போன்ற உணர்வுகளை ஏன் சுக்கிர ஓரையில் வெளிப்படுத்த வேண்டும் என்பதற்கான விளக்கம் :

சுக்கிர கிரகத்தின் மின்சக்தி பூமியில் உள்ள நேரமே ஓரை எனப்படும். இம்மின்சக்தி பூமியில் இருக்கும்பொழுது மனித உடம்பில் சுவாசத்தின் மூலம் இரத்தத்தில் கலந்து விந்து சக்தியயினை தூண்டுகிறது. இதனால் பாலுணர்வு ஏற்படுகிறது. எனவே பாலுணர்வு சம்மந்தப்பட்ட விஷயங்களை இம்மின்சக்தியுடைய நேரத்தில் கையாள்வது மிகப்பொருத் தமான ஒன்று. இம்மின்சக்தி பூமியில் இருக்கும் நேரம் ஆண், பெண் இருபாலருக்கும் பாலுணர்வு தூண்டப்படும். இதுபோன்ற சமயத்தில் ஆணுக்கு காதல் உணர்வு ஏற்படும். அச்சமயம் பெண்ணிற்கும் இவ்வுணர்வு ஏற்படுமாகையால் இம்மின்சக்தியுடைய நேரம் காதல், காமம், உடலுறவு போன்ற உணர்வுகளுக்கு ஏற்றது என்று இக்கிரக ஓரையில் இதை செய்ய லாம் என குறித்து வைத்துள்ளார்கள்.

## (37) குப்பைமேனி செடியைக் கண்டால் பூனை விலகிச் செல்கிறது ஏன் - விளக்கம்.

இச்செடியில் பூனையின் உயிருக்கு பங்கம் ஏற்படுத்தும் மின்சக்தி செயல்படுவதால் இதன் அருகில் பூனை செல்வதில்லை. மேலும் குப்பைமேனி செடி அதிகம் உள்ள இடங்களில் எலிகள் அதிக அளவில் இருக்கும்.

பூனை எலியை துரத்தினால் அவைகள் இச்செடியிருக்கும் இடத்திற்கு ஓடிவிட்டால் பூனை பின்தொடர்வதில்லை.

எலிக்கு இயற்கை தந்த பாதுகாப்பு குப்பைமேணிச் செடி, மேலும் குப்பைமேனிச் செடிக்கு பூனை வணங்கி என்ற பெயரும் உண்டு.

## (38) ஹீப்ரு மொழிக்கும் நம் வாழ்க்கைக்கும் மறுக்க முடியாத மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இது பற்றிய விளக்கம். புரோனாலஜி என்னும் தலைப்பின் கீழ் உள்ள விளக்கம்தான் இதற்கும்.

## (39) மலத்தில் எச்சில் துப்பினால் தொண்டை வலிப்பதும், பிறகு தீயில் துப்பினால் வலி பறப்பதும் எதனால் நிகழ்கிறது. விளக்கம்.

ஒருவருடைய உடம்பிலிருந்து வெளியேறிய மலத்தில் அம்மனிதருடைய உடம்பில் இயங்கும் மின்காந்த அலை இருக்கும். அதன்மீது நம்முடைய உமிழ்நீர் கலந்து எச்சிலை துப்பும்பொழுது நம் மலத்திலிருக்கும் மின்காந்த அலை அதன்மீது துப்பப்பட்ட எச்சலில் இருக்கும் மின்காந்த அலையுடன் அது புறப்பட்ட இடத்திற்கே சென்று தொண்டையில் எதிர்மறை மின்சக்தி உருவாக்கி அவ்விடத்தில் வலி ஏற்படுகிறது. பிறகு அவ்வாறு பாதிக்கப்பட்ட எச்சிலை தீயின் மீது துப்பும்பொழுது தீயின் வெப்ப மின்சக்தி மீண்டும்

தொண்டையில் எதிர்மின்சக்தியாக தாக்கம் செலுத்தும்பொழுது தொண்டையில் ஏற்பட்ட வலி சரியாகி விடுகிறது.

## (40) காற்றுக்கும், நம்முடைய செல்வச் செழிப்பிற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. விளக்கம்.

ஒன்பது கிரகங்களின் மின்காந்த அலைகள் மனித உடம்பிற்குள் காற்றின் வழியே சென்று உடலில் அனைத்து விதமான இயக்கங்களையும் செய்கிறது. பிரணாயாமம் போன்ற மூச்சுப் பயிற்சிகளை சூரிய உதயத்திற்கு முன்பு செய்யும்பொழுது நாம் சுவாசிக்கும் காற்று சீரடைகிறது. இதன் மூலம் காற்றின் வழியே உடலுக்குள் செல்லும் மின்காந்த அலைகளும் சரியான விகிதங்களில் செயல்படுகிறது. எனவே, உடம்பில் இவ்வொன்பது கிரகத்தினுடைய பணிகள் செம்மையடைகின்றன. மேலும், இவ்வொன்பது கிரகத்தினுடைய மின்காந்த அலைகளில் பிறந்தவர்களின் உயர்வான தொடர்புகளையும் ஏற்படுத்துகிறது.

ஒரு முக்கிய செய்தி ஜாதகத்தில் ஒன்பது கிரகமும் நல்ல டிகிரியிலிருந்தால் நாம் விடும் மூச்சுக் காற்றும் நல்ல விகிதத்தில் அமைந்து உடலும் மனமும் தெளிந்த நீரோடை போல் இருக்கும். எனவே ஜாதகத்தில் கிரக கோளாறு இருப்பவர்கள் வாசியோகம் பயின்று மூச்சுக்காற்றை சிராக்கி அதன் மூலம் ஒன்பது கிரகத்தின் மின்சக்தியை சரியான விகிதத்தில் ஒடுக்கி அதன் பயனாய் நல்ல மின்காந்த அலைகளில் பிறந்தவர்களின் சேர்க்கையும் நல்ல உடல் நலமும் பெற்று வாழ்வாங்கு வாழலாம்.

## (41) அமாவாசை பற்றிய சில உண்மைகள் :

அமாவாசை என்பது சூரியன், சந்திரன் முதலான ஒன்பது கிரகங்களின் மின்காந்த அலைகள் எதிர்மறையாக பூமியில் உள்ள நாள். எனவேதான் மேற்படி நாளில் உபவாசம் இருப்பது சிறந்தது என்ற கருத்தும் வந்தது. ஏனெனில் இது போன்ற நாட்களில் கிரகங்களின் எதிர்மறை மின்சக்தி சுவாசத்தின் வழியே நம் உடலில் கலப்பதால் மேற்படி கிரகத்தின் பணிகள் உடம்பில் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இன்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மேற்படி நாளில் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதை நாம் காண்கிறோம். மேலும் இம்மின் சக்தி உடைய நாளில் பேய், பிசாசு, ஏவல் போன்ற எதிர்மறை சக்திகளின் தன்மை பூமியில் அதிகம் இருக்கும். இம்மின்சக்தி உடைய நாளில் ஆலயம் செல்வதற்கும் தர்ப்பணம் செய்வதற்கும் மாந்ரீகம் செய்வதற்கும் ஏற்றதாக இன்றளவும் நடைமுறையில் உள்ளது. எதிர்மறை மின்சக்தி மேற்படி நாளில் பூமியில் அதிகம் இருப்பதால் எதிர்மறை சக்திகளால் பாதிக்கப்பட்டவர்கள் இன்றும் பல்வேறு அவஸ்தை படுகிறார்கள்.

## (42) ஒன்பது கிரகங்களால் ஆளப்படும் நாடுகள் பற்றிய விந்தையான அறிவியல் உண்மை.

சூரியனின் மின்சக்தி அதிகம் உடைய நாடு பிரிட்டன். மேற்படி கிரகம் மற்றவர்களை அடக்கி ஆளும் தன்மை உடையதால் இந்நாடு நிலப்பரப்பில் சிறியதாக இருந்தாலும்

பலநாடுகளை ஆண்டிருக்கிறது. இதில் நமது இந்தியாவும் அடங்கும்.

சந்திரனின் மின்சக்தி அதிகம் உடைய நாடு ஆஸ்திரேலியா, நியூசிலாந்து. ஏனெனில் இக்கிரகம் நீரும் நீர்சார்ந்த இடமான மேற்படி நாட்டில் அதிகம் விழுவதால் இது சந்திரனின் பூரண ஆதிக்கம் உடைய நாடு. மேற்படி நாட்டின் முக்கிய தொழில் மீன்பிடித்தல் மற்றும் கடல் சார்ந்த தொழில்கள்.

ராகு என்ற கிரகத்தின் மின்சக்தி உடைய நாடு அமெரிக்கா. ஏனெனில் ராகு என்ற கிரகம் முறை தவறிய உறவுக்கும் அணு, இசாயணம் ஆகியவற்றிற்கும் காரணம் வகிக்கிறது. இன்றும் மேற்படி நாட்டில் முறை தவறிய மணவாழ்க்கையும் உலகை பயமுறுத்தும் அளவிற்கு அணு ஆயுதங்களையும் இந்நாடு பெற்றிருக்கிறது.

புதன் மின்சக்தியுடைய நாடு இந்தியா. ஏனெனில் புதன் கிரகம் அனைத்து விதமான தன்மைகளையும் தன்னுள் கொண்டது. அவ்வாறே இந்தியாவும் எல்லா பருவகாலங்களையும், அதற்கேற்ற இயற்கை சூழ்நிலையையும் பெற்றுள்ளது.

சுக்கிரனின் மின்சக்தியுடைய நாடு டென்மார்க். நார்வே, சுவீடன் ஆகும். மேற்படி கிரகம் பனிமலைகளுக்கும், பாலுக்கும் காரகம் வகிக்கிறது. மேற்கண்ட நாடுகள் இத்தகைய சிறப்பை பெற்றுள்ளது.

செவ்வாய் கிரகத்தின் மின்சக்தியுடைய நாடு சீனா, மங்கோலியா, கொரியா, வியட்டநாம் போன்ற நாடுகள். மேற்படி கிரகம் இயற்கை சீற்றங்களுக்கும் வீர கலைகளுக்கும் காரகம் வகிக்கிறது. இவை மேற்படி நாடுகளுக்கு பொருந்தும்.

சனி கிரகத்தின் மின்சக்தியுடைய நாடு ஆப்ரிக்கா கண்டம். மேற்படி கிரகம் அடிமை தொழில்களுக்கும் இருண்ட பிரதேசங்களுக்கும் காரகம் வகிக்கிறது. இவை மேற்படி நாடுகளுக்கு பொருந்தும். ஏனெனில் இக்கண்டத்தில் பிறந்தவர்கள் பெரும்பாலும் கரிய நிறம் உடையவர்களாகவும் அடிமைபடுத்தப் பட்டவர்களாகவும் பல்வேறு தேசங்களில் அடிமைதொழில் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். மேலும் இக்கிரகம் பசி, பஞ்சம், வறுமை முதலியவைகளுக்கும் காரகம் வகிக்கிறது. இதுவும் இக்கண்டத்திற்கு பொருந்தும்.

## (43) வலிப்பு நோய் கண்டவர் கையில் இரும்பை கொடுப்பதன் ரகசியம் என்ன?

சனி என்ற கிரகத்தின் மின்சக்தி மனித சரீரத்தில் இயங்க தடை ஏற்படும்பொழுது இந்த வலிப்பு நோய் வருகிறது. எனவேதான் இந்நோய் வந்தவர் கையில் மேற்படி கிரகத்தின் மின் சக்தியை அதிகம் உடைய இரும்பை கொடுக்கும்பொழுது இம்மின்சக்தி அம்மனித உடலில் ஏற்பட்ட தடையை சரி செய்கிறது. மேலும் இம்மின்சக்தியை காகம் என்ற பறவை அதிகம் பெற்றுள்ளது. எனவேதான் மேற்படி கிரகத்தின் மின்காந்த தடையால் ஏற்படும் வலிப்பு நோய்க்கு இம்மின்சக்தி உடைய காகத்தின் பெயரை வைத்து காக்காய் வலிப்பு என்று கூறினர். ஏனெனில் மேற்படி கிரகம் நம் நாட்டில் தெய்வமாக வழிபடுவதால் இக்கிரத்தின் பெயருக்கு பதில் இந்நோய்க்கு காகத்தின் பெயரை சேர்த்தார்கள்.

## (44) எந்த கிழமைகளில் எந்த உணவுகளை சாப்பிடவேண்டும்?

ஞாயிறு : சூரியனின் மின்சக்தி உடைய நாள். மேற்படி நாள் அனைத்து உணவுகளுக்கும் ஏற்றது.

திங்கள் : சந்திரனின் நீர்மின்சக்தி உடைய நாள். நீர் சத்துள்ள பூசணி, சுரைக்காய், புடலங்காய், தர்பூசணி முதலான உணவுக்கு மிகவும் ஏற்ற நாள்.

செவ்வாய் : செவ்வாயின் உஷ்ண மின்சக்தி உடைய நாள். மேற்படி நாளில் மாம்பழம், பேரிச்சை, அன்னாச்சி போன்ற உஷ்ண உணவுகளுக்கு ஏற்றது.

புதன் : புதன் கிரகத்தின் மின்சக்தியுடைய நாள். அனைத்து உணவிற்கும் ஏற்றது.

வியாழன் : குருவின் மின்சக்தியுடைய நாள். மஞ்சள் நிற கனிகள் ஏற்றது. எலுமிச்சை, ஆரஞ்சு முதலியவை.

வெள்ளி : சுக்கிரன் மின்சக்தியுடைய நாள். பாதாம், பிஸ்தா, முந்திரி போன்ற உணவுகளுக்கு ஏற்ற நாள். தாதுவிருத்திக்கு சாப்பிடும் மருந்து உட்பட

சனி : சனி கிரகத்தின் மின்சக்தியுடைய நாள். எண்ணை உணவுகளுக்கு ஏற்ற நாள்.

## (45) கை ரேகை பற்றிய சில உண்மைகள் :

நம் கையில் இருக்கும் ரேகைக்கும் நம் உடலில் உள்ள உறுப்புகளுக்கும் தொடர்பு உண்டு. மேலும் கையில் உள்ள ஆயுள்ரேகை என்பது நம் உடலில் இருக்கும் கணையம் மற்றும் கல்லீரல், கிட்னி முதலிய உறுப்புகளுடன் நரம்பு மண்டலத் தொடர்பினை உடையது. இந்த ரேகை எந்த அளவிற்கு தெளிவாக பலமாக உள்ளதோ அந்த அளவிற்கு இது சம்பந்தப்பட்ட உறுப்புகளும் பலமுடன் உள்ளது என்று அர்த்தம். இவ்ரேகை மிகவும் இலேசாக இருந்தால் மேற்படி உறுப்புகள் அதிகம் பலமில்லாததாக இருக்கும். எனவேதான், இந்த ஆயுள் ரேகையின் கோணத்தையும் அதன் தன்மையையும் வைத்து ஆயுள் ஸ்தானத்தை கணிக்கிறார்கள். இந்த ரேகை தெளிவில்லாவிடில் மேற்படி சம்பந்தப்பட்ட உறுப்புகளும் பலமில்லாமல் சீக்கிரம் செயல் இழந்து ஆயுள் பங்கம் ஏற்படும் என்பது அனுபவ உண்மை.

இவ்வாறு கையில் உள்ள ஒவ்வொரு ரேகைக்கும் அது தொடர்பு கொண்டுள்ள நரம்பு மண்டலத்திற்கும் உள்ள தொடர்பினை மேற்படி ரேகை மூலம் அறிந்து பலன் சொல்லும் கலையே கைரேகை சாஸ்திரம் எனப்படும். இது மிகவும் அறிவியல் பூர்வமான கலை.

## (46) பாம்பு புற்றுகள் பற்றிய சில அமானுஷ்யமான தகவல்கள் :

ராகு, கேது கிரகங்களின் மின்காந்த அலைகள் பாம்பு என்ற உயிரினத்தின் உடலில் இயங்குகிறது. எனவே பாம்பு வசிக்கும் இடங்களில் மேற்படி கிரகங்களின் மின்காந்த அலைகள்

அளவுக்கு அதிகமாக இருப்பதால் இக்கிரக மின்சக்தியினால் பாதிக்கப்பட்டவர்கள் மேற்படி புற்றுமண் இருக்கும் இடங்களுக்கு சென்று மேற்படி கிரக மின்சக்தியை உடலில் கிரகித்து இக்கிரகத்தினால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளலாம். இன்றும் நடைமுறையில் மேற்படி இடங்களையும் பாம்புகளையும் வழிபடும் பழக்கம் உள்ளது.

## (47) எண் "18" ஏன் போர்க்களமான எண்ணாக குறிக்கப்பட்டது. இவ்வெண் பின்னனியில் உள்ள விஞ்ஞானப்பூர்வமான உண்மை :

சூரியன், சனி, செவ்வாய் ஆகிய இம்மூன்று கிரகங்களின் மின்காந்த அலைகளை குறிக்கும் எண்தான் "18" ஆகும். மேற்படி எண்களை பெயரில் வைக்கும்பொழுது இம்மூன்று கிரகத்தினுடைய மின்காந்த அலைகள் சுவாசத்தின் வழியே உடலுக்குள் சென்று மன அழுத்தம், உஷ்ணம் போன்ற தாக்கங்களை அதிக அளவில் ஏற்படுத்தி மேற்படி தாக்கங்கள் கோப உணர்வாக வெளிப்பட்டு சண்டைக்கு வழி கோள்கிறது. இவ்வாறு மேற்படி எண்ணை பெயரில் அமைத்தாலும் நாட்டிற்கு பெயராக வைத்தாலும் தொழிலுக்கு பெயராக வைத்தாலும் அவ்விடங்களில் சண்டை சச்சரவுகளே மிகுந்திருக்கும்.

உதாரணம்

S R I L A N K A
3 2 1 3 1 5 2 1 = 18

K A S H M I R
2 1 3 5 4 1 2 = 18

மேற்படி இடங்களில் நடக்கும் சம்பவம் நாம் அனைவரும் அறிந்ததே.

## (48) தன்வந்திரி ஹோமம் செய்தால் நோய் நீங்குகிறது. ஏன் என்பதற்கான விஞ்ஞான ரீதியான விளக்கம்.

மேற்படி ஹோமம் செய்து முடித்ததும் உடனே உடலில் உள்ள நோய் தீர்ந்துவிடும் என்று அர்த்தமல்ல. ஆனால் மேற்படி நோயை தீர்க்கும் வல்லமையுள்ள மருத்துவரின் தொடர்பு நிச்சயம் கிடைக்கும் என்பது அனுபவ உண்மை. ஏனெனில் மேற்படி ஹோமத்தில் சீந்தில் கொடி, செந்நாயுருவி பயன்படுத்தப்படுகிறது. சீந்தில் கொடியில் கேது மற்றும் செவ்வாய் கிரகத்தின் மின்சக்தி குவிந்துள்ளது. செந்நாயுருவியில் கேது மற்றும் சந்திரன் கிரகத்தின் மின்சக்தி குவிந்துள்ளது. இத்தகைய மின்சக்தி மேற்படி மூலிகையை அக்னியில் இடும்பொழுது இம்மின்சக்தி வெளிப்பட்டு இதே மின்சக்தியுடைய மனிதர்களின் தொடர்புகளை ஏற்படுத்துகிறது. அத்தகைய மனிதர்கள் அனைத்து நோய்களையும் தீர்க்கவல்ல அறிவு ஜீவியாக இருப்பார்கள் என்பது அனுபவ உண்மை. இவ்வாறே எல்லா ஹோமங்களுக்கும் மறைமுகமான ஆற்றல் உண்டு.

**(49) பெயரெண் "9" எண் வருமாறு அமைத்துக்கொண்டவர்களுக்கு ஏன் அதிக கோபம் வருகிறது.**

செவ்வாய் கிரகத்தின் மின்சக்தி உடைய எண்தான் "9" என்ற எண்ணும் இதன் வரிசை எண்களான 18, 36, 45, 51 போன்றவையும் இதனுள் அடங்கும். மேற்படி கிரகம் உஷ்ண மின்சக்தியை உடையது. இதை பெயரில் பயன்படுத்தும்பொழுது இம்மின்சக்தி சுவாசத்தின் வழியே இரத்தத்தில் கலந்து இரத்த அழுத்தத்தினை ஏற்படுத்தி அது கோப உணர்வாக மாறுகிறது.

**(50) செந்நாயுருவியின் விதையை அஸ்த நட்சத்திர நாளன்று சாப்பிட்டால் வெகு நாட்களுக்கு பசியெடுப்பதில்லை. காரணம்.**

செந்நாயுருவியில் கேது மற்றும் சந்திரன் போன்ற கிரகத்தின் மின்சக்தியும் இக்கிரகங்களை இயக்கும் பிரபஞ்ச மின்சக்தியும் அதிக அளவில் உள்ளது. அஸ்த நட்சத்திரம் என்பது சந்திரனின் மின்சக்தி பூமியில் உள்ள நாள். மேற்படி நாளில் இச்செடியின் விதையை உமிழ்நீருடன் சேர்த்து சிறிதளவு சாப்பிடும்பொழுது இவற்றில் அடங்கியிருக்கும், மேற்படி கிரகத்தின் மின்சக்தியும் பிரபஞ்ச மின்சக்தியும் சரீரத்தின் நீர் நாடியில் கலந்து உடம்பின் மிகுந்தஆற்றல் உடையதாக மாற்றி விடுகிறது. இவற்றின் வீரியம் வெகுநாட்களுக்கு உடலில் இருக்கும் அதுவரை பசி, தாகம் போன்ற உணர்வுகள் உடலில் தோன்றாது.

**(51) முள்ளம்பன்றி முள், எட்டிமரவேர் இவ்விரண்டையும் வீட்டில் வைத்திருந்தால் கடும் சண்டை சச்சரவுகள் ஏற்படும். ஏன்?**

முள்ளம்பன்றியில் செவ்வாய் கிரகத்தின் மின்சக்தியும் எட்டி மரத்தில் ராகு மற்றும் செவ்வாய் கிரகத்தின் மின்சக்தி மிகுந்துள்ளது. எனவே இவற்றினை வீட்டில் வைக்கும்பொழுது இவற்றில் இயங்கும் மேற்படி கிரகத்தின் மின்சக்தி அவ்வீட்டிலுள்ள மனித உடலில் சுவாசத்தின் வழியே கலந்து உஷ்ண தாக்கத்தை ஏற்படுத்தி கோப உணர்வை தூண்டச்செய்து பின்பு அது சண்டையாக மாறுகிறது. மேற்படி பொருள் வீட்டில் இருக்கும்வரை இத்தகைய உணர்வுகள் தொடர்ந்து தூண்டப்படும்.

**(52) மாந்திரீகத்தில் சண்டகாளிவேர், நரபூதாளம், குலநாசவேர் இவற்றுடன் வேண்டாதவரின் காலடி மண் இம்மூன்றையும் நவமி திதியில் வேங்கை மரத்தின் கீழ் பதித்தால் சம்பந்தப்பட்ட நபர் பாதிக்கப்படுகிறார். காரணம்.**

மேற்படி மூலிகைகளில் சனி மற்றும் ராகு கிரகத்தின் மின்சக்தி மிகுந்துள்ளது. இவற்றுடன் ஒருவருடைய காலடி மண்ணை செவ்வாய் கிரகத்தின் மின்சக்தி மிகுந்த நாளான நவமி திதியில் இம்மின்சக்தியுடைய வேங்கை மரத்தின் கீழ் பதிக்கும்பொழுது மேற்படி கலடி மண்ணில் இயங்கும் மின்காந்த ஆற்றல் யார் காலடியிலிருந்து எடுக்கப்பட்டதோ அவர்களின்

உடலில் மேற்கண்ட மூலிகையின் மின்சக்தி சுவாசத்தின் வழியே கலந்து பல்வேறு இன்னல்களை ஏற்படுத்துகிறது.

## (53) அமாவாசையில் பிறந்த குழந்தை கெட்ட பெயரெடுக்கும் என்பதன் பின்னனியில் உள்ள அமானுஷ்யமான உண்மை :

மேற்படி நாளில் அனைத்து கிரகங்களின் மின்காந்த அலைகளும் எதிர்மறை தன்மையில் இயங்குவதால் அந்நாளில் பிறந்த குழந்தையின் உடம்பும் இது போன்ற எதிர்மறை மின்சக்தியை பெற்று வளரும் காலத்தில் இதே மின்சக்தி பல்வேறு நிலைகளில் பிரிந்து எதிர்மறை எண்ணங்களை தோற்றுவித்து அவ்வெண்ணத்தின் பயனால் தீய செயல்கள் செய்து கெட்ட பெயர் எடுக்கிறது. இத்தகையவர்கள் ஆலயங்களுக்கும், மகான்களை தரிசித்தும் இத்தகைய எதிர்மறை எண்ணங்களை குறைத்துக்கொண்டு நேர்மறை எண்ணங்களை வளர்த்து சீரும் சிறப்புமாக வாழலாம்.

## (54) விஷ்ணுகிரந்தி வேர், தொட்டால் வாடி, செம்முள்ளி இம்மூன்றின் வேரையும் அறைத்து திலர்த்தமிட்டு சென்றால் மிருகங்கள் வசியமாகும் காரணம் :

மேற்படி மூலிகையில் சுக்கிரன் மின்சக்தி பரிபூரணமாக இயங்குவதால் இவற்றின் மூலம் எடுக்கப்பட்ட வேர்களை அரைத்து நெற்றியில் திலர்த்தமிடும்பொழுது மேற்படி கிரகத்தின் மின்சக்தி நெற்றியில் உள்ள ஆக்கினை சக்கரம் வழியாக உடலில் பரவி உடம்பை மோகன நிலைக்கு எடுத்துசெல்கிறது. மேலும் அவர் அருகாமையில் வரும் விலங்கினங்களும் இத்தகைய தாக்கங்களுக்கு ஆட்பட்டு அதுவும் மோகன நிலை அடைவதால் அவைகள் மனிதனை தாக்குவதில்லை.

## (55) செம்முள்ளி, சிவந்தகஞ்சா, ஊமத்தை, பொன்னாவரை, செந்நாயுருவி, தொட்டால் வாடி சிறிய நங்கை இவற்றின் வேர்களை சஷ்டி திதியில் அரைத்து திலர்த்தமிட்டு சென்றால் ஜனவசியம் ஏற்படுவது எதனால் என்பதன் விளக்கம் :

மேற்படி மூலிகைகளில் சுக்கிரன், செவ்வாய், குரு, சந்திரன், கேது, புதன் போன்ற கிரகங்களின் மின்காந்த அலைகள் அதிக அளவில் உள்ளது. இம்மூலிகையில் வேர்களை சுக்கிரனின் மின்சக்தி உடைய நாளான சஷ்டி திதியில் அரைத்து திலர்த்தமிடும்பொழுது மேற்படி கிரகங்களின் மின்காந்த அலைகள் நெற்றியில் உள்ள ஆக்கினை சக்கரத்தின் வழியே சரீரத்தில் ஊடுருவி இதை மின்சக்தி உடைய மனிதர்களின் அருகாமையில் செல்லும்பொழுது அவர்களும் இத்தாக்கத்திற்கு ஆட்பட்டு மேற்படி நபரிடம் இனம் புரியாத நிலையில் வசியப்படுகிறார்கள்.

''வாழ்க வையகம்''

வாழ்க வளமுடன்

(நெய் கலந்த அரிசியின் இரண்டாம் பாகத்தை ஸ்வாஹா என்று சொல்லும்போது அக்னியில் இடவும்)

## அவசியமாக அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய சில முக்கியமான ஜோதிட குறிப்புகள்

எந்த ஒரு கிரகமும் மனிதனுக்கு கெடுதலைச் செய்வதில்லை, அத்தகைய கிரகங்களின் மின்காந்த அலைக்ள் உடம்பில் சரியாக இணையாவிட்டால் அக்கிரக மின்சக்தியினால் ஏற்படும் தொடர்புகளும் உடலின் செயல்பாடுகளும் பாதிக்கும் என்பது திண்ணம்.

ஒருவருடைய ஜாதகத்தில் நன்மை தரக்கூடிய கிரகங்கள் 6, 8, 12ல் மறைந்து விட்டாலோ பகை நீசம் பெற்றுவிட்டாலோ அத்தகைய கிரகத்தினால் ஏற்படும் நற்பலன்கள் கிடைக்காது என்பது ஜோதிட விதி. ஆனால் அத்தகைய கிரகத்தின் மின்காந்த அலைகள் நம் உடலோடு இணையவில்லை என்பதனையே ஜோதிடத்தில் பகை, நீசம், மறைவு என கூறப்படுகிறது.

ஜாதகத்தில் பெரும்பாலான கிரகங்கள் கெட்டுவிட்டது என்று சொன்னால் அத்தகைய கிரகத்தின் மின்காந்த ஆற்றல் உடலோடு இணையவில்லை என்பதே பொருள்.

எந்தவித கிரகதோஷமாக இருந்தாலும், அதாவது தோஷம் என்றால் கிரக மின்காந்த அலை உடலில் இணையாமல் உள்ளது என்று அர்த்தம்.

## தோஷங்களும் அவற்றை நீக்கும் அறிவியல் பூர்வமாக வழிமுறைகளும் :

புத்திரதோஷம் என்பது மனித உடம்பில் விந்துவையும், விந்துவின் உயிர் சக்தியையும் தரக்கூடிய கிரகங்கள் உடம்போடு இணையாவிட்டால் அத்தகைய செயலையே ஜோதிடத்தில் புத்திரதோஷம் என்கிறார்கள். எனவேதான் எந்த கிரகத்தினுடைய மின்காந்த அலையினால் இந்த பாதிப்பு உள்ளதோ அம்மின்சக்தியுடைய கோவில்களுக்கு செல்ல சொல்கிறார்கள். ஆனால் இது நடைமுறையில் பெரும்பாலும் ஒத்து வருவதில்லை.

## இந்த தோஷத்தை போக்கும் வழி :

எந்த கிரகத்தின் மின்காந்த சக்தியினால் மேற்படி பாதிப்பு உள்ளதோ அக்கிரக மின்சக்தி பூமியில் உள்ள நாளில் அம்மின்சக்தியை இத்தோஷம் உள்ள மனித உடம்பிற்குள் செலுத்திவிட்டால்; மேற்படி தோஷத்திற்கு உடனே விடிவுகாலம் பிறக்கும். இதற்கு எங்களிடம் நிரூபணம் உள்ளது.

இவ்வாறே ஜோதிடத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து தோஷங்களையும் எக்கிரக மின்சக்தியினால் மேற்படி தோஷம் ஏற்பட்டதோ அக்கிரக மின்சக்தி பூமியில் உள்ள நாளில் உடலில் செலுத்திவிட்டால் அடுத்த ஓரிரு தினங்களில் மாற்றம் தெரியும்.

## கல்வி :

ஒரு குழந்தை நன்றாக படிக்கவில்லை என்றால் அக்குழந்தையின் ஜாதகத்தில் கல்வியைத் தரும் கிரகங்களின் மின்சக்தி (4-ம் வீடு மற்றும் 2-ம் வீடு) அக்குழந்தையின் உடம்பில் இணையவில்லை என்று அர்த்தம்.

மேற்படி எக்கிரகத்தின் மின்காந்த அலைகளினால் இப்பாதிப்பு ஏற்பட்டதோ அக்கிரக மின்சக்தி பூமியில் உள்ள நாளில் உடலில் செலுத்திவிட்டால் குழந்தையின் போக்கில் உடனடி மாற்றம் தெரியும்.

எவ்வித கிரக தோஷமாக இருந்தாலும் அத்தகைய தோஷத்தினை அது சம்மந்தப்பட்ட கிரகத்தின் மின்சக்தி பூமியில் இருக்கும் நாளில் உடலில் செலுத்தி உடனடியாக நன்மையடையலாம்.

யோகமானதோ, அவயோகமானதோ இல்லை.

... நன்றாக படிக்கவில்லை என்றால் அக்குழந்தையின் ஜாதகத்தில் கல்வியைத் தரும் கிரகங்களின் மின்சக்தி (4-ம் வீடு மற்றும் 2-ம் வீடு) அக்குழந்தையின் உடம்பில் இணையவில்லை என்று அர்த்தம்.

மேற்படி எக்கிரகத்தின் மின்காந்த அலைகளினால் இப்பாதிப்பு ஏற்பட்டதோ அக்கிரக மின்சக்தி பூமியில் உள்ள நாளில் உடலில் செலுத்திவிட்டால் குழந்தையின் போக்கில் உடனடி மாற்றம் தெரியும்.

எவ்வித கிரக தோஷமாக இருந்தாலும் அத்தகைய தோஷத்தினை அது சம்மந்தப்பட்ட கிரகத்தின் மின்சக்தி பூமியில் இருக்கும் நாளில் உடலில் செலுத்தி உடனடியாக நன்மையடையலாம்.

இறுதியாக எந்த மனித ஜாதகமும் யோகமானதோ, அவயோகமானதோ இல்லை. ஜாதகத்தில் சொல்லப்படும் அனைத்து தோஷங்களும் கிரகங்களின் மின்காந்த ஆற்றல் உடம்போடு இணையாமல் போனால் என்ன ஆகும் என்பது பற்றித்தான் சொல்கிறது. ஜோதிடத்தில் உள்ள பரிகாரம் அனைத்தும் உடலோடு இணையாத மின்சக்தியை உடலோடு இணைப்பதற்கே அன்றி வேறில்லை. இதனை கால விதானம் அறிந்து செய்யாமல் போகும் போதுதான் இம்மின்சக்தி உடலில் இணையாமல் போகிறது.

கிரக மின்சக்தியை உடலுக்குள் செலுத்தி அம்மின்சக்தியினால் நம் வாழ்வில் ஏற்பட்ட அனைத்து துயரங்களுக்கும் தோஷங்களுக்கும் வழி காண்பதே சிறந்த வழி.

**<u>கிரக மின்சக்தியை உடலில் செலுத்தும் கலையையும்</u> <u>+ Name Chart</u> <u>அமைக்கும் கலையையும் தெரிந்து கொள்ள தனி புத்தகம் வெளியிட்டுள்ளோம் ஏனெனில் அதற்கு பிரபஞ்சத்தைப் பற்றிய சில அறிவு</u>**

... புத்தகத்தில் உள்ள விவரங்கள் :